1405

தொகுதி 10.] 1931௵ ஆகஸ்டு௴ 1௳ [பகுதி 7.

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரகாசகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேராவலைக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 4-பாகம் விலை ரூபா 8-4-0

அமராவதி 2-ரூபா.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிருபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிருக்க கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்தில் சிக்கிய பூபாலம்பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

அப்போது மதனவல்லி சுகசிங்கம்பிரபுவினுடைய இரக்கத்தைப் பெறும்பொருட்டு, மிகவும் துயரடைந்து அதனல் மெலிவுற்றவளேபோல் பாசாங்கு செய்து, தன் இருகாங்களாலும் தன் முகத்தை மூடிக்கொண்டவண்ணம், "எனக்குத் தேகசுகமில்லே. நான் மெலிவுற்றிருக்கிறேன்" என்று கூறினுள்.

அதற்குச் சுகசிங்கம்பிரபு, "அப்படியானல் நான் உனக்குச் சிஷ்ருஷைசெய்யும் தாதியைப்போல் வேலே செய்கிறேன்" என்று கூறிக்கொண்டே அவளது கன்னத்தில் அழுத்தமாக முத்தமிட்டான். அப்போது மதனவல்லி, "ஐயா, நீ இப்போது கண்ட காட்சிக்குப் பின்னரேனும் என் மீது இரக்கம் காட்டி என்னே மன்னிக்கலாகாதா? தயவு செய்து கிருபையைக்காண்பி" என்று பணிவுடன் கேட்டுக்கொண்டாள்.

சுகசிங்கம் பிரபு மதனவல்லியின் கோரிக்கையைப் பொருட்படுத்தாமல், "எனதன்புள்ள கண்மணி! அடுத்த அறைக்குச் செல்வோம் வா! அங்குதான் உன்னேயழைத்துச் செல்லவேண்டுமென நான் நினைத்திருந்தேன். அங்கு சென்ற பின்னர் நீ பெரிய நோயாளியைப்போலும், நான் உனக்கு உண்மையுடன் உழைக்கும் தாதியைப்போலும் இருக்கலாம். நான் உன்னிடம் எவ்வளவு அன்புடன் நடக்கிறேன் என்பதை நீயே உணரலாம்" என்று கூறினுன்.

அப்போது அவள் மெதுவாக எழுந்து உட்கார்ந்து கொண்டு கடுகடுப்புடன், "ஐயா பிரபுவே! நீ பேசுவதெல்லாம் மிகக் கொடுமையான பரிகாசமாக இருக்கிறது" என்று பதில் அளித்தாள். அதற்கு அவன், "எனதன்புள்ள மாதே, உன்னைப்போன்ற மனோ உறுதியும் தைரியமுமுடைய மாதர்களுக்கு இப்போது நீ தானப்பனைக் கண்டதுபோன்ற சம்

186559.
சென்னை-600 003

பவங்கள் முதலில் சிறிது அச்சத்தைத் தருமாயினும் உடனே அவர்கள் ஆறுதலடைந்து விடுவார்கள் என்பது எனக்குத் தெரியும். மேலும் தானப்பனை நீ இப்போதுதான் முதல் முறையாகப் பார்க்கவில்லை. சில மாதங்களுக்கு முன் இதே அறையில் அவன் உனக்குத் துணையாகத்தான் சர்தார் சூரியநாயகம் பிரபுவின் ஏற்பாட்டின்மீது வந்திருந்தானே. ஆகையால் இதற்காக நீ அதைரியப்பட வேண்டியதில்லை,'' என்று பரபரப்புடன் கூறினன்.

அதற்கு அவள், "ஏது நீ இன்று மிகவும் கடுமையாகவும், பிடிவாதத்துடனும் இருக்கிறாய்?'' என்று கேட்க சுகசிங்கம்பிரபு, "மதனவல்லி! என்மீது நீ புகார் செய்வதில் பிரயோசனமில்லை. என்னை இவ்வாறு பேசும்படி தூண்டியதெல்லாம் நீயே. இன்று என்னிடம் அடைக்கலம் புகுந்து விடுவதுபோல் பாவனை காட்டினயே. எப்போது நமது போத்தை ஒப்புக்கொண்டு விட்டாயோ அதன் ஷரத்துப்படி நீ இன்று என் இஷ்டத்தைப் பூர்த்திசெய்யக் கடமைப்பட்டிருக்கிறாய். இன்று உனக்கு உதவிசெய்ய சர்தார் சூரியநாயகம் இல்லை. அன்று உனக்குச் சாதகமாக வந்த தானப்பனே இன்று உனக்கு விரோதமாக சாட்சிகூறும் நிலையில் இருக்கிறான். என்னைப்பற்றியும், எனது சகோதரன் புத்திரி தெய்வயானையைப் பற்றியும் ஏதோ சில விஷயங்களை நீ அறிந்துகொண்டிருப்பதால் அதனைச்சொல்லி என்னைப் பயமுறுத்தலாமென நினைக்கிறாய் போலும்! அதெல்லாம் பலிக்காது. ஏனெனின், அவள்மீது சுமத்தப்படும் குற்றங்களையெல்லாம் உன்மீதும் சுமத்தமுடியும். மேலும், இளவரசரின் காதலியும் செல்லப்பப்பிரபுவின் மனைவியுமான மதனவல்லி சுகசிங்கம் பிரபுவினிடமிருந்து நூறு ஆயிரம்பவுன்களை ஒரு நிபந்தனையின்மீது பெற்றிருக்கிறாள் என்பது உலகம் அறியும்'' என்று விவரமாகவும் தைரியத்துடனும் பேசினன்.

அப்போது மதனவல்லி தன் நிலைமையை உணர்ந்து கொண்டு இனி பேசுவதில் பயனில்லை என அறிந்து, "அந்த நிபந்தனையை நிறைவேற்றிவைக்க இப்போது மதனவல்லி இங்கே வந்திருக்கிறாள்" என்று வேடிக்கையாகக்கூறி பிரபுவின் இஷ்டப்படி நடக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்து விட்டாள். பிறகு அவர்கள் அந்த அறையில் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பது பற்றி நாம் அதிகம் எழுதவேண்டியதில்லை. மதனவல்லி, தனக்கு இஷ்டமில்லாவிட்டாலும் அப்பிரபுவின் விருப்பத்துக் கிணங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. கிழப்பிரபுவோ, நீண்டகாலமாக மதனவல்லியின் இன்பத்தை அனுபவிக்கக் காத்திருந்ததுடன் அதற்காக லட்சம் பவுனும் தியாகம் செய்திருக்கிறான். இந்நிலையில் தன்னிடம் தன் இஷ்டப்படி நடந்து கொள்ளத்தான் விரும்பிய அழகியமாதே தனியான ஓரிடத்தில் அகப்பட்டபோது அவன் எவ்வளவு ஆர்வத்துடன் அபரிமிதமாக அந்த இன்பத்தை நுகர்ந்திருப்பான் என்பதை நேயர்களே யூகித்து அறியலாம்.

இரவு பன்னிரண்டு மணி சுமாருக்கு மதனவல்லி தன் மாளிகையின் பின்புற வாயிலின் முன் வந்து வண்டியை விட்டு இறங்கி யாருக்கும் தெரியாமல் தன் அறைக்குச் சென்றாள். கதவைத் திறந்துகொண்டு அவள் உள்ளே நுழைந்ததைக்கண்ட கௌரி கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, "ஆ! பேஷ். சரியான வேளைக்கு வந்துவிட்டாய். நான் கேட்ட தொகையை நீ உன்னுடன் கொண்டு வந்திருக்கிறாய் என்றே நான் நம்புகிறேன்" என்றாள்.

மதனவல்லியும் தன் முகமூடியையும் எடுக்காமல், "இதோ இருக்கிறது எடுத்துக்கொள், போய்வா. உனக்கு வந்தனம் கூறுகிறேன்" என்று கூறினாள். உடனே கௌரி

யும் அந்த நோட்டுகளையெல்லாம் எண்ணிப் பார்த்துவிட்டுத் தன் மடியில் வைத்துக்கொண்டு அவ்வறையின் கதவினருகில் சென்று, "மதனவல்லி! சந்தோஷம் போய் வருகிறேன். நமக்குள் மனஸ்தாபம் வேண்டாம். நாம் எப்போதும் சிநேகமாகவே இருக்கவேண்டும்" என்றாள். அதற்கு மதனவல்லி, "அப்படி ஒன்றும் மனஸ்தாபமில்லை. நீ போய் வா. எனக்கு மிகவும் அலுப்பாக இருக்கிறது" என்று தெரிவித்தாள்.

கௌரியும் போய்விட்டாள். மதனவல்லி தன் முகமூடியையும் போர்வையையும் அப்புறப்படுத்திவிட்டுத் தன் இருகரங்களையும் பிசைந்துகொண்டே தன் துக்கத்தை அடக்க முடியாமல் கண்ணீர் விட்டு அழுதாள். தன் துக்கமயமான நிலைமை கௌரிக்குத் தெரியக்கூடாதென்பதால் தான் அவள் எதிரில் முகமூடியை அப்புறப்படுத்தவில்லை. அவள் போய்விட்ட பிறகு தன் முகத்தை சோபாவில் அணைத்துக்கொண்டு கண்ணீர்விட்டுத் தன் கேவல நிலைமைக்காக மிகவும் வருந்தினாள். சுவரோடாயினும் சொல்லியழு என்பதைப்போல் சோபாவினிடம் சொல்லி அழுது தன் துயரைத் தீர்த்துக்கொண்டாள்.

154 - வது அத்தியாயம்

ஆனால் அந்த இரவின் அதே நேரத்தில் மதனவல்லி மட்டுமே இவ்வாறு துயரக்கடலில் மூழ்கி வருந்துவதாக நினைக்கவேண்டாம். அவளுக்கு இத்துயரத்தைத் தந்த சுகசிங்கம் பிரபுவின் மாளிகையிலேயே அவரது சகோதரியின் புத்திரியாகிய தெய்வயானையும் அதே சமயத்தில்

சொல்லொணுத் துயரத்துக்கு ஆளாகித் துன்பம் அனுபவித்துக்கொண் டிருந்தாள். அது என்ன என்பதை இப்போது கவனிப்போம்.

தெய்வயானையின் நிலைமையை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்களென்று நம்புகிறோம். முன் நாள் இரவுதான் அவள் இளவரசர் மாளிகைக்குச்சென்று திரும்பியதும் தானப்பன் அவளுடைய அறையில் புகுந்து கொண்டு, அவளைத் தப்பறியும் செல்வநாதனும், மதுரைநாயகம் பிரபுவும் பின் தொடர்கிறார்கள் என்பதை அவளிடம் அறிவித்து விட்டு அவளைப் பயமுறுத்தி அவளது கற்பையும் கெடுத்துப் பின் அவளுடைய சூழ்ச்சிக்கு ஆளாகி அம்மாளிகையிலுள்ள இயந்திர நாற்காலியில் அகப்பட்டுக் கொண்டதும், பின்னர் அவள் மதுரைநாயகம் பிரபுவின் மாளிகைக்குச்சென்று அவனிடம் அவனுடைய தந்தை சம்பந்தமான மர்மத்தைச் சொல்லிப் பிறகு பள்ளத்தோட்டத்திலுள்ள மாளிகைக்குச்சென்று பிரேதம் முதலியவற்றைப் பார்த்துவிட்டு அன்று மாலை வீட்டுக்கு வந்ததும் நேயர்களின் ஞாபகத்திலிருக்கும்.

அன்று மாலை வீட்டுக்குத் திரும்பிய தெய்வயானை, பல அலைச்சல்களின் காரணமாக அலுத்துப் போயிருந்ததால் அவள் நேரே தன் படுக்கை யறைக்குச்சென்று தூங்கிவிட்டாள். அவள் இராத்திரி நெடுநேரத்துக்குப் பின்னர் விழித்துக்கொண்டு பார்த்தபோது தன் படுக்கையின் அருகில் ஒரு வேலைக்காரி உட்கார்ந்திருப்பதையும், விளக்கு ஏற்றப்பட்டிருப்பதையும் கண்டாள். அவ்வேலைக்காரியிடம் மணி என்ன என்று கேட்டபோது அவள், "அம்மா! இப்போது மணி ஒன்பதரை ஆகிறது. நீ மாளிகைக்குத் திரும்பிவந்ததும் கீழே இறங்கி வாராமல் மாடியிலேயே படுத்திருப்பது கண்டு

நமது பிரபு சிறிது வருத்தமடைந்து என்னை இங்கே காவல் இருக்கும்படிசொன்னார்'' என்று பதில் அளித்தாள்.

அதைக்கேட்ட தெய்வயானை, "அப்படியா, நீ உடனே போய் எனக்கு ஏதேனும் ஆகாரம் கொண்டுவா. மிகவும் பசியாக இருக்கிறது. என் பெரிய தந்தை அங்கே இருந்தால் என் வந்தனத்தைச் செலுத்திவிட்டு எனக்குத் தேக அசௌக்கிய மெனச்சொல்லி அவருக்குச் சௌகரியமிருந்து அவரே இங்கு வந்து என்னைப் பார்ப்பதாயின் நான் சந்தோஷப்படுவேன் எனச் சொல்லு'' என்று கூறினாள்.

அந்த வேலைக்காரி வெளியே போனபின்னர் தெய்வயானை தனியாக இருந்தபடியால் பலவாறாகச் சிந்திக்க ஆரம்பித்தாள். தான் முன்நாள் இரவு தானப்பனால் மானபங்கப் படுத்தப்பட்டதையும், அவனைப் பிறகு தந்திரமாக இயந்திர நாற்காலியில் சிக்கவைத்ததும் தன் பெரிய தந்தையிடம் கூறி விடலாமா என்று யோசித்தாள். அவ்வாறு கூறி விட்டால் தான் யாரும் அவ்வறையில் சென்று அவனை விடுவித்து விடாதபடி தடுத்து விடலாம் என்றும் நினைத்தாள். ஆனால் இதற்கெல்லாம் சுகசிங்கம் பிரபு சம்மதிப்பானோ என்று சந்தேகித்தாள். ஒரு மனிதனைத் தன் மாளிகையிலே சிறுகச் சிறுகக் கொல்வதை அப்பிரபு அநுமதிப்பானோ என்பது அவளுக்குச் சந்தேகமாய் விட்டது. எனினும் தன் யோசனைக்குச் சாதகமாகவும் பாதகமாகவும் பல விஷயங்களை யோசித்ததில் தன் பெரிய தந்தை இவ்விஷயத்தில் தனக்கு உதவிசெய்தே தீரவேண்டும் என்னும் முடிவுக்கு வந்தாள். அப்படிப்பட்ட கொடிய மனிதனை தானப்பனை வெளியில் விட்டு வைப்பது என்றென்றைக்கும் தனக்கு ஆபத்து விளைவிப்பதே என்று கருதினாள்.

வேலைக்காரி வெளியே போயிருந்த சற்று நேரத்துக்குள் தெய்வயானை இவ்வாறெல்லாம் யோசித்து இவ்விஷயத்தை உடனே தன் பெரிய தந்தையினிடம் சொல்லி விடுவதென்னும் முடிவுக்கு வந்தாள். ஆனால் வேலைக்காரி ஒரு பெரிய தட்டு நிறைய ஆகாராதிகளைக் கொண்டுவந்தபோது சுகசிங்கம்பிரபு அன்று மாலை ஏழுமணி சுமாருக்கு எங்கேயோ வெளியே போனதாகவும், இன்னும் திரும்பி வரவில்லையென்றும் தெரிவித்தாள்.

அப்போது தெய்வயானை வேலைக்காரியைப் பார்த்து, அப்படியானால் நான் நாளை காலை எல்லாவற்றையும் என் பெரிய தந்தையிடம் சொல்லிக் கொள்கிறேன். நீ இப்போது போய்ப் படுத்துக்கொள். உன்னை இனி நான் அழைக்க மாட்டேன்'' என்று கூறி அவளை அனுப்பிவிட்டாள்.

மீண்டும் தனியே இருக்க நேர்ந்ததால் தெய்வயானை தான் செய்யவேண்டிய வேலைகளைப்பற்றி நினைக்கலானாள். தன் பெரிய தந்தை மாளிகையில் இல்லாமற்போனது நல்லதென்றும், இருந்திருந்தால் தானப்பன் இவ்வாறு சாவதை அவன் அனுமதிக்க மாட்டானென்றும் நினைத்தாள். ஆகவே பிரபு இல்லாமலிருப்பதும் ஒரு காரியத்துக்கு நல்லதே என்று கருதினாள்.

அவள் தன் ஆகாரத்தைச் சாப்பிடுவதற்காகத் தன் படுக்கையில் உட்கார்ந்தபோது பின் வருமாறு தனக்குள் நினைக்கலானாள். "என் பெரிய தந்தை இப்போது வெளியே போயிருப்பதால் இரவு நெடுநேரத்துக்குப் பிறகு தான் திரும்பி வருவார். ஆகவே அவர் இன்றிரவே என்னை வந்து பார்க்கமாட்டார். நாளை அவர் என்னை வந்து பார்ப்பதற்குள் இயந்திர நாற்காலியில் அகப்பட்டுக்கொண்டு பசியாலும் பட்டினியாலும் வலியாலும் அவஸ்தைப்படும் தானப்பன்

இறந்து விடவும் கூடும். அவன் இறந்துபோன பின்னர் என் பெரிய தந்தைதான் என்ன செய்யக்கூடும்? எப்படியாவது அப்பிரேதத்தை வெளிப்படுத்த வேண்டியதுதானே. அப்போது என் யோசனையைத் தடுப்பதற்கு வழியில்லை பிரேதத்தை வைத்துக் கொண்டிருக்க முடியாதாகையால் எப்படியாவது அதை அப்புறப்படுத்தியே ஆகவேண்டும்.''

இவ்வாறு நினைத்துக் கொண்டிருந்த தெய்வயானைக்கு, மெதுவாக எழுந்து சென்று இயந்திர நாற்காலிக்கு உள்ள அறைக்குப்போய்த் தன் ஜன்மவிரோதியாகிய தானப்பன் எவ்வாறு அவஸ்தைப்படுகிறான் என்பதைத் தன் கண்ணாரக் காணவேண்டுமென்னும் அவா தோன்றியதால் அவள் தன் படுக்கையை விட்டு எழுந்து சில ஆடைகளை அணிந்து கொண்டாள். அவ்வறைக்குச்சென்றால், அவன் இறந்து போயிருந்தாலும் அப்பிரேதத்தைக்கண்டு தன்னை மானபங்கப்படுத்திய அவன் அவ்வாறு இறந்ததனால் சந்தோஷப் படலாமென்றும், இறவாமல் சிறுகச் சிறுக இறந்து கொண்டே குற்றுயிரா யிருந்தாலும் அதையும் கண்டு திருப்தி யடையலாமென்றும் கருதினள். அவள் சிறிது நேரம் தூங்கி யிருந்ததாலும், அப்போதுதான் வேலைக்காரி கொண்டுவந்த ஆகாரத்தை அருந்தி யிருந்ததாலும் அவள் அலைப்போ களைப்போ சிறிதுமின்றி எவ்வளவு தூரமாயினும் நடக்கவும், எக்காரியம் செய்யவும் தயாராகவும் கூடியவளாக இருந்தாள், ஆனால் எத்தகைய இன்பமு மனுபவிக்கக்கூடிய நிலைமையில் அவளது மனோபாவம் இருக்கவில்லை. பள்ளத் தோட்ட மாளிகையில் ஸ்நானத்தொட்டி சம்பந்தமாய் எற்பட்டு அதனால் ஒருவருஷ காலமாய் அவளை வாட்டி வந்த விசாரம் ஒருவாறுதெளிந்தது. என்றாலும் இப்போது அவள் இருக்கும் நிலைமையைத் தானே வெறுத்துக்கொண்டாள்.

அவள் கற்பு நிலையினின்றும் தவறிய காமத்துக் கிரையாகித் தன் மானத்தை இழந்த மாதாகவே இருந்தாலும் கேவலம் கொள்ளைக்கூட்டத்தைச் சேர்ந்தவனும், இழிகுலத்தானும், விகாரசொரூப முடையவனுமான தானப்பன் அவளை மான பங்கப்படுத்தி விட்டதால் அவள் இனி வாழ்வதைவிட இறப்பதே மேல் என்று கருதினாள். மேலும் தன்னைத்தானே வெறுத்துக் கொண்டாள். தன் அழகை அவளை நினைத்துக் கொண்டபோது அந்த அழகு கேவலம் கொலைக்காரனுக்குப் பயன்பட்டதே என்று கண்ணீர் வடித்தாள். மனக்குழப்ப மடைந்து விசார மடைந்தாள்.

இவ்வாறு நினைத்துக்கொண்டே தெய்வயானை, இயந்திர நாற்காலியுள்ள அறைக்குச் செல்வதற்காக ஆடைகளை அணிந்துகொண் டிருந்தபோது தன் அறையின் கதவை வெளிப்புறத்தி லிருந்து யாரோ திறப்பதைக் கண்டாள். வேலைக்காரியே ஏதேனும் சமாசாரம் கொண்டு வருகிறாளோ வென்று நினைத்தாள். உள்ளே நுழைந்த உருவம் திடீரென்று திரும்பி அக்கதவை உள்புறம் பூட்டிவிட்டு அவள் பக்கம் திரும்பவே தெய்வயானை பீதியடைந்து ஓவென்று கதறி அப்படியே படுக்கையில் சாய்ந்தாள். கொடிய தானப்பனின் உருவத்தைக் கண்டதே இதற்குக் காரணமாகும்.

தானப்பன் மிக்க ஆத்திரத்துடனும் கோபத்துடனும், "ஆ! நீ எதிர்பார்த்ததற்கு விரோதமாக நேரிட்டுவிட்டது. இப்போது நீ என்ன செய்யப்போகிறாய்" என்று கூறிக் கொண்டே அறையின் நாற்புரத்தையும் சுற்றிப்பார்த்ததில் அங்கு மேஜையின்மீது ஒருதட்டில் ஆகாரவகைகளும் மது பானமும் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு, "ஆ! ஆகாரம்! மதுபானம்! அதுதான் இப்போது எனக்குத்தேவை" என்று கூறிக்கொண்டே அவற்றை அருந்த அதனிடம் சென்றான்.

அப்போது தனக்கு எமனே வந்துவிட்டான் எனக் கருதிய தெய்வயானை, மிரண்ட மானேபோல் தாவிக் குதித்து அங்கிருந்த மணியை அடிக்கப்போனாள். ஆனால் தானப்பன் அதை லட்சியம் செய்யாமல் அவளது கையைப் பிடித்தான். அது அவளது கையை முறிப்பதுபோல் இருந்தது. ஆகவே அவள் வேதனை பொறுக்கமாட்டாமல் கீச்சென்று கூவினாள். எனவே அவள் மணி அடிக்க முடியாமல் அவனிடம் சிக்கிக்கொண்டாள்.

அவன் மிகக் கோபத்துடன் அங்கிருந்த ஒரு சிறு குட்டையால் அவளது கைகளைக்கட்டி அவள் இருக்குமிடம் விட்டு எழுந்திருக்கமுடியாதபடி ஒரு நாற்காலியில் வீசி எறிந்தான். தெய்வயானை பார்த்தாள். தன் திக்கற்றதும், அபாயமானதுமான நிலைமை தெரிந்துவிட்டது. அளவுக்கு மீறிய அச்சம் அதிகரித்துவிட்டது. அவன் பித்தம் பிடித்தவன்போல் கோபாவேசங்கொண் டிருக்கிறானென்றும், இச்சமயத்தில் எப்படிப்பட்ட பலாத்காரச் செயலையும் செய்யத் துணிவானென்றும் நினைத்தாள். ஆகவே அவள் தன் மரண காலமே சம்பவித்துவிட்டதென்று நினைத்துத் துயரத்துடன் மௌனமாக விழுந்த இடத்தில் கிடந்தாள்.

தானப்பன் அவளைப்பார்த்து, "நான் விரும்புகிற வரையில் நீ இப்படியே கிடக்கவேண்டியது. ஆனால் நீ ஏதேனும் சத்தம் செய்தால் இதோ இக்கத்தியால் உன்னைத்தண்டித்து விடுவேன். ஜாக்கிரதை" என்றுகூறி மிக பளபளப்பான கத்தி ஒன்றைக் காட்டினான். அதைக்கண்டதும் அவள் தேகம் முழுதும் அச்சத்தால் நடுங்கியது.

அப்போது தானப்பன், அங்கு மேஜைமீது தெய்வயானைக்கென்று வேலைக்காரியால் வைக்கப்பட்டிருந்த பல வகை ஆகாரங்களையும், மதுபானங்களையும் காட்டு மிருகம்

எவ்வளவு ஆவலுடன் தன் ஆகாரத்தைத் தின்னுமோ அது போல் அருந்தலானான். அந்த ஆகாரம் ஐந்தாறு பேர்களுக்குப் போதுமானதா யிருந்தும் அதை அவன் ஒருவனே, அதுவும் மிக அலட்சியமாகப் புசித்துவிட்டான். இவ்வளவு ஆகாரத்தையும் அவன் சில வினாடிகளுக்குள் முடித்துவிட்டான். அவன் அன்று முழுதும் பட்டினி கிடந்ததால் அவனுக்கு அவ்வளவு ஆகாரமும் வேண்டி யிருந்தது.

தானப்பன் இவ்வாறு ஆகாரம் அருந்திக்கொண்டிருந்த போது தெய்வயானை தன் நிலைமையைப்பற்றி நினைத்து நினைத்து வருந்திக்கொண்டிருந்தாள். அதையும் அவள் நிதானமாகச் சிந்திக்க முடியவில்லை. எதிரில் ஒரு பெரிய பயங்கரபூதம் இருப்பதுபோல் அவள் அச்சங்கொண்டாள். தான் அவனிடம் அகப்பட்டுக் கொண்டதையும் இப்போது அவனே அவளுடைய எஜமானாக இருப்பதையும், தேவையாயின் அவன் அவள் உயிரையும் வாங்கிவிடலாமென்பதையும் நினைத்து மிகவும் துக்கப்பட்டாள். அவன் இனி என்ன செய்யப்போகிறான்? தன்னிடம் எவ்வாறு நடந்துகொள்ளப் போகிறான் ஆகிய விஷயமொன்றும் தெரியாமல் தவித்தாள்.

அவள் அவ்வாறு துக்கப்பட்டுக்கொண் டிருக்கையில் தானப்பன் ஆகாரத்தையும் மதுபானத்தையும் அருந்திவிட்டு அவனது வாயைத் துடைத்துக்கொண்டே தெய்வயானையைப் பார்த்து, "ஓ! இந்த ஆகாரம் எனக்குப் போதாதென்றாலும் நேற்றிரவு ஒன்பது மணிமுதல் நான் பட்டினியாக இருப்பதால் இதுவே எனக்கு ஒருவாறு ஆறுதல் அளித்தது. இப்போது நீ என்ன சொல்கிறாய், உன் சூழ்ச்சி பலிக்காமற் போய்விட்டதே. ஆ! உன் சூழ்ச்சியை நினைக்கும் போதே எனக்கு என்னகோபம் வருகிறது தெரியுமா? நான் எப்படி விடுவித்துக்கொண்டேன் என்று நீ நினைக்கிறாய்?

உங்களைப்போன்ற உயர்தர குடும்பங்களில் நடக்கும் அயோக்கியச் செயல்களெல்லாம் எனக்கு நன்மையையும் பலனையும் தருகின்றன. உண்மையைக் கூறவேண்டுமாயின், நான் பசியாலும் பட்டினியாலும் வலியாலும் சாகக்கிடந்த போதுதான் அவ்வறையின் கதவு திறக்கப்பட்டது. சிறு விளக்கின் வெளிச்சம் தெரிந்தது. அங்கே உனது பெரிய தந்தையும், மதனவல்லிச் சீமாட்டியும் கள்ளக்காதல் இன்பம் அனுபவிக்க வந்தார்கள்'' என்று சொல்லிக்கொண்டிருக்கையில் தெய்வயானை மிக ஆச்சரியத்துடன் "ஆ! என் பெரிய தந்தையும் மதனவல்லியுமா வந்தார்கள்'' என்று வாய்விட்டலறினாள்.

அதற்கு அவன் புன்சிரிப்புடன், "ஆம்; அவர்கள்தான் வந்தார்கள். உயர்குடும்ப மாதர்களாகிய நீங்கள் செய்யும் அக்கிரமத்துக்கும் அளவுண்டோ? எப்படியாவது இருக்கட்டும். அவர்கள் அங்கு வந்தது எனக்கு நன்மையையே தந்தது. ஏனெனின் அவர்கள் அப்போது அங்கு வந்திராவிட்டால் நான் நாளைய காலைக்குள் இறந்து பிரேதமாகி இருக்க வேண்டியதுதான். ஆனால் இப்போது நான் பிராணபயம் சிறிதுமின்றி என் சட்டைப்பையிலும் இருநூறு பவுன்களை வைத்துக்கொண்டு, நல்ல இனிய ஆகாரத்தையும் அருந்தி விட்டுச் சில புட்டி மதுபான வகைகளைச் சட்டைப்பையில் வைத்துக்கொண்டிருப்பதுடன் உயர் குடும்பத்தைச்சேர்ந்த ஒரு அழகிய மாதும் என் இஷ்டப்படி என் காமத்தைத் தீர்த்துக் கொள்ளத்தக்க வசதி யளிக்கத்தக்கவளாய் இருக்கிறாள்'' என்று கூறினான்.

அவன் அக்கடைசி வார்த்தைகளைக் கூறியபோது தெய்வயானை தன் தலைமீது இடி விழுந்ததுபோல் பதைத்தாள் என்றாலும் அவளால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை யாத

லின் அவள் அப்படியே மறுபடியும் நாற்காலியில் சாய்ந்து விட்டாள். அப்போதும் அவன் தன் பேச்சைத்தொடர்ந்து, "சுமார் ஒன்றரைமணி நேரத்துக்கு முன்பே நான் விடுதலையடைந்தேனென்றாலும் நேராக இங்கு வந்து பார்த்ததில் யாரோ சிலர் பேசுவதாகத் தெரிந்ததால் அடுத்த அறையில் புகுந்து உள்புறம் கதவைப் போட்டுக்கொண்டு சிறிது தூங்கினேன். இப்போது இங்கே வந்ததில் நல்ல ஆகாரம் அகப்பட்டதுடன் மதுபானம் அகப்படவே என் ஆயாசமும் களைப்பும் தீர்ந்து சௌக்கிய மடைந்தேன். இப்போது நீ என் காதலியாக இருப்பதால் உன்னுடன் வேடிக்கையாகக் காலங்கழிக்கவும், நமக்குள் ஒருவகையான பிற்காலதிட்டத்தைப் போட்டுக் கொள்ளவுமே இங்கு உட்கார்ந்திருக்கிறேன்." என்றான்.

அவன் அவ்வாறு பேசியபோது தெய்வயானை பொறுக்க முடியாத துக்கத்தால் தன் கண்களைத்திறந்து பார்த்தாள். அவள் அவ்வாறு பார்த்ததானது, அவள் தானப்பனைக்கண்டு தன்மீது இரக்கங்காட்டித் தன்னை மன்னித்து விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்வது போல் காணப்பட்டது. ஆனால் கொலை செய்வதிலும் கொள்ளை யடிப்பதிலும் பேர்போன அவன் சற்றேனும் இரக்கங் காட்டுவான் என எதிர்பார்க்க இடமுண்டா?

அவளது முகத்தைக்கண்ட தானப்பன், "என்ன யோசிக்கிறாய்? நீ கவலைப்படலாகாது. துக்கப்பட்டால் உன் அழகு கெட்டுப்போகும். உன் அழகு குலைவதைக்காண நான் சகிக்கமாட்டேன். என் முக்கியமான சிநேகிதர்களிடமெல்லாம் உன்னுடைய அழகைப்பற்றிப் பெருமையாகப் பேசிக்கொள்வேன்," என்று கூறினான்.

உடனே தெய்வயானை எதிர்பாராதவிதமாய் ஒருவித பயத்தை யடைந்து 'ஓ கடவுளே! இப்போது என் காதில் விழுவதெல்லாம் உண்மையாக இருக்குமா? இது சாத்தியமா?' என்று ஏக்கக்கூவினுள். அப்போது மதுபான வெறியில் இருந்த அவன், "ஆம் எல்லாம் உண்மையே. ஏன் சாத்தியப்படாது? இதோபார் என் அன்பிற் கறிகுறி காட்டுகிறேன்" என்று கூறிக்கொண்டே தன் ஆசனத்தை விட்டு எழுந்து சென்று தெய்வயானையின் முகத்தின்மீது முகத்தை வைத்து அவளது கன்னத்தில் கணக்கிலடங்காத முத்தங்களைத் தந்தான். அம்முத்தங்களைத் தடுக்கத் தன்னுலானவரை முயன்றும் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவன் அவளை அவ்வாறு பிணைத்து விட்டிருந்தான். எனினும் அவள் எவ்வளவோ முயன்றும் கூச்சலிட்டும் பார்த்தாள். ஆனால் அவன் அவளது வாயைத் தன் கையால் நன்றுக மூடிவிட்டதால் அவளுடைய கூச்சலின் சத்தமும் வெளியே கேட்கவே இல்லை.

கடைசியாக அவன், "என்ன? பார்த்தாயா நான் உன்னிடம் எவ்வளவு அன்புடன் இருக்கிறேன் என்பதை. இனியேனும் வா போவோம்" என்று கூறிக்கொண்டே அவளை நாற்காலியுடன் பிணைத்திருந்த சிறு குட்டையை அவிழ்த்து விட்டான். ஆனால் அவள் சிறிதும் அசையவில்லை. அவளுக்குத் துக்கமும் வெறுப்பும் அதிகமா யிருந்தது. அவன் அவளை எழுந்து வெளியே புறப்படத் தயாராகும்படி கூறிய போது அவள் அவனை, "எங்கே வாச்சொல்கிருய்" என்று கேட்பவள்போல் பார்த்தாள்.

அப்போது தானப்பன் மிகவும் கோபத்துடன், நான் விளக்கமாகக் கூறியும் நீ தெரிந்துகொள்ளவில்லையா? அப்படியானல் நீ உணரும்படி நான் செய்கிறேன். நீ என்

னுடைய காதலியாக இருக்க என்னுடன் வரவேண்டும். நான் உன்னை எனக்குச் சம்மதமான இடத்தில் விட்டு வைப்பேன். என்னுடன் இனி வாழவேண்டும்'' என்று கர்ஜித்தான்.

அதைக்கேட்ட தெய்வயானை மிக ஆத்திரத்துடன் தன் ஆசனத்தை விட்டு எழுந்து, "அயோக்கியனே! மகா பாதகனே! இனியும் இத்தகைய பேச்சுகளை நான் பொறுத்துக் கொண் டிருக்கமுடியாது. நீ வெளியே போ'' என்றாள். அதற்கு அக்கொடியவன், "அப்படியானால் இக்காரியத்தைச் செய்துவிட்டுதான் நான் வெளியே போவேன்'' என்று கூறிக்கொண்டே தன்னிடமிருந்த ஒரு பளபளப்பான பட்டாக்கத்தியை அவள் தலைமீது நீட்டினான்.

உடனே அவள் அவனது காலில் விழுந்து பணிந்து என்ன ஆய்விடுமோ என்னும் அச்சத்துடன், "தயவுசெய்து இரக்கம் காண்பி'' என்றாள். அதற்கு அவன், "நான் சொல்லும் கடைசி வார்த்தைகளைக் கேள். நான் உன்னைத் தொந்திரவு செய்ய விரும்பவேயில்லை. ஆயினும் நீயாக எனக்கு ஆத்திர மூட்டுகிறாய். என்னைக் கொன்றுவிட நீ இருமுறை முயற்சிசெய்தது ஞாபக மிருக்கட்டும். அன்றிரவு நகரின் வெளிப்புறத்திலுள்ள பாலத்தின்கீழ் என்னைக் குத்திக்கொல்ல முயன்றாய். மீண்டும் நேற்றிரவு என்னை இயந்திர நாற்காலியில் சிக்கவைத்து கொல்லமுயன்றாய். இதற்காக நான் உன்னைப் பழி வாங்காவிட்டால் என் மனம் திருப்தியடையாது. ஆனால் பழி வாங்குவதென்றால் உன்னைத் தொந்தரை செய்வதென்பதல்ல. உன்னை என் காதலியாக்கிக்கொண்டு விடுவதே. என் காதலியாக நீ இஷ்டப்படாவிட்டால் இதோ இந்தக் கத்தியால் உன்னைத் துண்டுதுண்டாக வெட்டிவிட வேண்டியதே. ஆகவே யோசித்து ஏதேனுமொரு முடிவுக்கு வா'' என்று அதட்டிக் கேட்டான்.

தெய்வயானை அவனது காலில் விழுந்தபடியே இருந்தாள். ஆனால் அவளது அங்கங்களெல்லாம் சோர்வுற்று விழுந்தன. மூளை குழம்பிவிட்டது. கண்கள் மூடின. சித்தஸ்வாதீன மற்றவளானாள். ஏதோ பிரேதம்போல் அசைவற்றுக் கிடந்தாள். அதைக் கவனியாமல் தானப்பன், "எழுந்திரு. ஆடைகளைச் சரியாக அணிந்துகொள். வெளியே போவோம் வா" என்றான். ஆனால் பதில் இல்லை. ஏன்? தெய்வயானை ஸ்மரணையற்று பூமியின்மீது கிடக்கின்றாள். அவள் எப்படிப் பேசமுடியும்?

அவள் சற்றுநேரத்துக்குப் பிறகு பிரக்ஞைபெற்று பார்த்தபோது தான் அங்கிருந்த கட்டில்மீது படுத்திருப்பதையும், அத்தானப்பன் தன் அருகிலிருந்துகொண்டு தேகத்தின்மீது தண்ணீர் தெளிப்பதையும் கண்டாள். உடனே மற்றும் சில அறிகுறிகளால் தன்னை தானப்பன் இரண்டாவது முறையாக அப்போதும் மானபங்கப்படுத்தியிருக்கிறான் என்பதையும் அறிந்து கொண்டாள். அப்போது அவள், "நீ என்னைக் கொன்று கொண்டே இருக்கிறாய், இதோ நான் இறந்துகொண் டிருக்கிறேன்" என்று சொல்லி அப்படியே மறுபடியும் மூர்ச்சையாய் விட்டாள்.

அதற்கு அவன் சிறிதும் ஈவிரக்க மென்பதின்றி, "ஓ, அதெல்லாம் பொய். நீ இப்படியெல்லாம் சாகமாட்டாய். நீ இளம் வயதினளாகவும் நல்ல பலமுள்ளவளாகவும் இருக்கிறாய். இப்போது இதே இடத்தில் எனக்குப் பதிலாக இளவரசன் இருந்தால் நீ சாகவும் மாட்டாய்; ஒன்றும் மாட்டாய். சந்தோஷமாகக் காலங்கழிப்பாய். நான் இங்கிருப்பதால்தான் நீ இவ்வாறு பாசாங்கு செய்கிறாய்" என்று கோபத்துடன் பேசினான்.

தெய்வயானை மெல்லிய குரலில் அழுதுகொண்டே, "ஓ, உனக்கு ஏதேனும் ஈவு இரக்கமென்பது இருக்குமானால்

என்னை விட்டுப்போ. உனக்கு நல்லுணர்ச்சி இருந்தால் என்னை விட்டுவிடு. இதோ நான் இறந்துகொண் டிருக்கிறேன்'' என்று கூறினுள். உண்மையிலேயே அவள் அவ்வாறு பேசும்போது அவளுடைய முகத்திலும் குரலிலும் ஒருவகை மாறுதல் காணப்பட்டது. அவள் வாஸ்தவத்திலேயே மாணுவஸ்தைப் படுவதைத் தானப்பனே உணர்ந்தான். ஆகவே அவனுக்குப் பயம் அதிகரித்துவிட்டது. என்னசெய்வதென்று அவனுக்குத் தோன்றவில்லை. அவளை அப்படியே விட்டுவிட்டுப் போய்விடவும் அவனுக்குச் சம்மதமில்லை. ஏனெனின், அவள் செய்த குற்றங்களுக்குக்காக எப்படியாவது பழிதீர்த்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணினுன். அவளைத் தான் வசிக்கும் ஆபாசமான இடத்துக்கு அழைத்துச்சென்று மானபங்கப் படுத்திஞல் தான் அவன் மனம் திருப்தியடையுமென்று கருதினுன்.

தானப்பன் படுக்கையின் அருகில் நின்றுகொண்டு இவ்வாறு யோசித்துக்கொண்டிருக்கையில் தெய்வயானை மாணுவஸ்தையடைந்து சிறுகச்சிறுக மூச்சுவிட்டுக்கொண்டே பிரேதம்போல் கிடந்தாள். அப்போதும் அவன் தான் அவளுடைய நிலைமையைச் சிறிதும் உணராதவன்போல் தைரியமாக, "எழுந்து வா, என்ன செய்துகொண்டிருக்கிருய்? உனக்கு என்ன சம்பவித்துவிட்டது?'' என்று கேட்டான். அதற்கு அவள், "ஐயோ தெய்வமே, நான் இறந்துகொண்டேயிருக்கிறேன். இறக்கும்போதாவது சிறிது மன அமைதியுடன் இருக்கும்படி என்னை அனுமதிக்கக்கூடாதா?'' என்று ஆழமான கிணற்றிலிருந்து பேசுவதுபோல் மெல்லிய குரலில் சொன்னுள்.

தெய்வயானையின் நிலைமையை அறிந்த தானப்பன் அங்கு அதிகநேரம் இருக்கத் தைரியங் கொள்ளவில்லை.

ஆகவே அவன் உடனே அவ்விடத்தை விட்டு ஓடிப்போவது நலமெனக் கருதி உடனே தன் உடைகளையெல்லாம் சரிப் படுத்திக்கொண்டு அவ்வறையினின்றும் புறப்பட்டான். அவன் மாடியிலிருந்து கீழே இறங்கிப் பகிரங்கமாகப் பொது வாயிலின் வழியே வெளியே சென்றபோது அங்கிருந்த காவல்காரன் அவனை உற்று நோக்கினன். அப்போது தானப் பன் தான் மாளிகை குமாஸ்தாவின் சினேகிதனென்று கூறி யும் காவல்காரன் கவனியாமல் அவனைச் சந்தேகத்துடன் பார்த்ததால் தானப்பன் கோபமடைந்து அக்காவல்காரன் தலைமீது ஒரு குட்டு குட்டினன். அதனுல் அவன் உடனே "அப்பா" என்று கீழே உட்கார்ந்துகொண்டான்.

ஆகவே எத்தகைய அபாயமுமின்றி தானப்பன் அம் மாளிகையை விட்டு வெளியே போய்விட்டான். நீண்ட நேரம் கழிந்தபிறகு காவல்காரன் சமாளித்து எழுந்துகொண்டு யாரோ திருடன் வந்து போய்விட்டதாகக் கிளர்ச்சி செய் தான். அப்போது எல்லா சேவகர்களும் எழுந்து அங்கு மிங்கும் ஓடித்திரிந்து கள்ளனைத் தேடினர். அச்சமயம் வேலைக்காரி தன் எஜமானியின் அறைக்குப்போய்ப் பார்த்த போது தெய்வயானை அதிக நோயால் வருந்துவதைக் கண் டாள். ஆனுல் தான் அவ்வறையில் இரண்டு மூன்று தட்டு களில் வைத்துவிட்டுப்போன ஆகார வகைகளெல்லாம் காலி யாய்விட்டிருப்பதைக் கண்டு ஆச்சர்யமடைந்தாள். ஆகவே அவள் அக்கொள்ளைக்காரர்கள் இவ்வறையிலும் நுழைந் திருக்க வேண்டுமென்று நிசசயித்தாள்.

அப்போது தெய்வயானையும் சிறிது ஸ்மரணை யடைந் ததால் தான் ஏதேனும் சாக்கு சொல்லவேண்டியதை ஒட்டி அவ்வேலைக்காரி கருதியதே சரி எனச்சொல்லிக் கள்வர்களைக் கண்டதும் தான் மூர்ச்சை யடைந்துவிட்டதாகக் கூறினுள்.

இவ்வாறாக தானப்பன் வந்துபோன விவரம் திருடர்கள் வந்துபோன பொய்க்கதையாக முடிந்துவிட்டது.

155 - வது அத்தியாயம்

தெய்வயானை தனது மாளிகையில் இவ்வாறு துயரை யடைந்த அதே இரவு அரண்மனையில் நடக்கும் விஷயத்தைக் கவனிப்போம். அந்த அரண்மனையில் இராணிக்குத் தோழிகளாக புஷ்பாங்கியும் பெரியநாயகியும் இருந்ததும், பிறகு பெரியநாயகிச் சிமாட்டி குமாரவேல் பிரபுவுடன் சம்பந்தம் ஏற்பட்டு அவமானம் வந்ததால் வேலையை விட்டு விட்டு மறைந்துபோய் இறுதில் பரிதிபுரத்தில் இறந்து போனதும், அரண்மனையில் பெரியநாயகிக்குப் பதிலாக செல்லப்பப்பிரபுவின் வளர்ப்புத்தாயாகிய பத்மாவதி யம்மாளுடன் அவள் வீட்டில் தங்கியிருந்த ஜயதேவியும், அவளது குமாரி பத்மாட்சியும் அங்கு மதனவல்லியின் சிபார்சினால் நியமிக்கப்பட்டதும், இளவரசனும் அப் பத்மாட்சி என்னும் கன்னிகையிடம் காதல்கொண்டு அவள் தாயாரின் அனுமதி பெற்றே நடு இரவில் அவள் அறையில் புகுந்து தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டதும், அப்போது பைத்தியம் பிடித்த அரசர் வந்துவிட்டதும் நேயர்களின் ஞாபகத்திலிருக்கும். ஆகவே புதிதாக நியமிக்கப்பட்ட ஜயதேவிக்கும் புஷ்பாங்கிக்கும் அதிக சிநேகம் ஏற்பட்டு விட்டிருந்தது. ஆக அவர்கள் இருவரும் சிற்றுண்டி யருந்தினாலும், சாப்பிட்டாலும் வேறு எது செய்தாலும் ஒன்றாகவே இருப்பது வழக்கம். அப்போதெல்லாம் அவர்கள் அரண்மனையில் நடக்கும் அக்கிரமங்களைப்பற்றிப் பேசிக்கொள்வார்கள். ஆகவே நாம் இந்த அத்தியாயத்தைத் தொடங்கிய இன்று மாலையும்

ஒரு அறையில் அவ்விருவரும் இராப்போஜனம் அருந்திக் கொண் டிருந்தார்கள்.

புஷ்பாங்கியும் ஜயதேவியும் இவ்வாறு இன்பமாகக் காலங் கழித்துக்கொண்டு ஏதேதோ வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருக்கையில் புஷ்பாங்கி, “எனதன்புள்ள ஜயதேவி நமது அரசகுமாரி அந்த இரகசியத்தைச் சொல்லும்படி என் பிராணனை வாங்கி விடுகிறாள். இன்று காலையில்கூட நந்த வனத்தில் என்னுடன் தனியாகப் பேசிக்கொண்டிருந்த போது அந்த இரகசியத்தைக் கூறும்படி தான் தொந்தரை செய்தாள்” என்று கூறிப் பெரிய விஷயத்தைப் பேச ஆரம் பித்தாள்.

ஜயதேவி:—அரசகுமாரி சீனனுடைய அபூர்வ மரணத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள அவ்வளவு ஆவலாய் இருப்ப தேன்?

புஷ்பாங்கி:—மரணமென்ன? அதைக் கொலை என்றும் கூற லாம்.

ஜய:—அப்படியானால் சீனன் கொலைதான் செய்யப்பட்டான் என்பது உனக்கு நிச்சயமாகத் தெரியுமா?

புஷ்பா:—ஆம்; நிச்சயமாகவே கொலை என்றே நம்புகிறேன். நாம் இருவரும் சிநேகமானபிறகு எவ்வளவோ விஷ யங்களைப் பேசி முடித்தோமேயொழிய சீனனுடைய சமாசாரத்தைப் பூராவாகப் பேசவில்லை.

ஜய:—அரசகுமாரி சண்பகவல்லி இங்குள்ள எல்லாரையும் விட்டுவிட்டு உன்னைமட்டும் சீனன் மரணம் சம்பந்தமாய் விசாரிப்பதேன் என்பதில் எனக்கு ஆச்சரியம்தான். இதனால் உனக்குதான் விவரம் பூராவும் தெரிந்திருக்க

வேண்டுமென்று தெரிகிறது. நீயாக அதைச்சொல்வாய் என்று கருதியே நான் சும்மா இருந்தேன்.

புஷ்பா:—விஷயத்தைச் சொல்கிறேன் கேள். பாவம்! பெரிய நாயகிச் சீமாட்டி! அவள் பரிதிபுரத்தில் இறந்துவிட்டாளென்று சமீபத்தில் வெளியாயிருந்ததல்லவா? அவள் இங்கே உன் வேலையில் இருந்தபோது நானும் அவளும் மிகச் சிநேகமாக இருந்தோம். ஒருநாள் மாலை நாங்களிருவரும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தபோது சீனன் சமாசாரம் பேசவேண்டியதாயிற்று. அப்போது நான் கூறப்போவதை யார் கேட்கப்போகிறார்கள் என்று கருதி தைரியமாகச் சொல்லிக்கொண்டிருந்தேன். ஆனால் அதை முடிக்கும் தருணத்தில், அரசகுமாரி சண்பகவல்லி மறைவிலிருந்து அதைக் கேட்டுவிட்டாள் என்று தெரிந்தது. நான் சொன்ன வரையில் அவளும் கேட்டுவிட்டதாகவே தெரிகிறது.

ஐய:—ஓ! அப்படிக் கேட்டுவிட்டிருந்தால் மிகக் கஷ்டம் தான். ஏன்? அது நடந்து அதிக நாட்களாய் விட்டதா?

புஷ்பா:—ஆம்; சில மாதங்களாயின. பெரியநாயகிச் சீமாட்டி ராஜிநாமா செய்துவிட்டு அவளுக்குப் பதிலாக நீ இங்கு வருவதற்குச் சொற்ப தினங்களுக்கு முன்புதான் நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது அரசகுமாரி கேட்டுவிட்டாள். அதுமுதல் அவ்விவரத்தை பூராவாகச் சொல்லும்படி கேட்டுத் தொந்தரை செய்கிறாள். ஆனால் அவ்வளவு சிறுவயதினளான அவளிடம் இதையெல்லாம் கூறுவதாயென்று யோசிக்கிறேன்.

ஐய:—அதென்ன? சீனன் மரணம் சம்பந்தமான விஷயம் அவ்வளவு விசித்திரமானதா? அதை யாரிடமும் சொல்லலாகாதா?

புஷ்பா:—எனதன்புள்ள சிநேகிதியே. நீ அவ்விவாத்தைக் கேட்டால், அது அரசகுமாரி போன்ற கன்னிகைகளிடம் சொல்லலாகாதென்பதை ஒத்துக்கொள்வாய். ஆகவே நான் சண்பகவல்லி என்னைக் கேட்கும்போதெல்லாம் ஏதேதோ சாக்குப்போக்குகளைச் சொல்லிக் காலந்தள்ளி வருகிறேன். ஆனால் இன்று காலை அவள் என்னை அதிகம் வற்புறுத்தி அதிகார தோரணையிலும் கேட்க ஆரம்பித்துவிட்டாள். அவள் மிகவும் நல்லவளே. எனினும் எப்படிச் சொல்வதென யோசிக்கிறேன்.

ஜய:—புஷ்பாங்கி! சினனுடைய மரணத்தைப்பற்றிய விஷயம் சிறிதும் மறைக்காமல் என்னிடம் கூறலாமல்லவா? எனக்கும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று மிக ஆவலாக இருக்கிறது.

புஷ்பா:—உன்னிடம் சொல்லாமல் இருப்பேனா? நீ எப்படிப்பட்ட இரகசியங்களையெல்லாம் என்னை நம்பி என்னிடம் சொல்லும்போது நான் மட்டும் உன்னை நம்பாமல் இருப்பேனா? உன் குமாரி பத்மாட்சிக்கும் இளவரசருக்கும் சம்பந்தம் ஏற்பட்டுவிட்டதையும் நீ எனக்குத் தெரிவித்தாயல்லவா? அப்படி நீ தெரிவிக்கவில்லையென்றாலும் உன் மகள் இப்போது கர்ப்பவதியானது நிச்சயமானால் சங்கதி தெரிந்துவிடுகிறது.

ஜய:—கர்ப்பவதியானாலும் பயமில்லை. ஒரு குழந்தை பிறந்துவிடுமாயின் அதனால் என் மகளுக்கும் இளவரசருக்குமிடையில் அத்தியந்த நட்பு ஏற்பட்டுவிடுமல்லவா? நான் கூறியது தெரிந்ததா?

புஷ்பா:—ஆம். அதில் என்னசந்தேகம். குழந்தையொன்று பிறப்பதனால் அவர்களிடையில் அன்பு அதிகப்படுமென்

பதில் சந்தேகமில்லை. சம்பந்தம் ஏற்பட்டதற்கும் குழந்தை பிறப்பதற்கும் நாம் சந்தோஷப்பட வேண்டியதுதான். இந்த அரண்மனையில் எவ்வளவோ மர்மங்கள் நடந்ததை நான் அறிவேன். பத்மாட்சியின் கர்ப்பம் முதிர்ச்சி யடைந்து பிரசவிக்க வேண்டிய காலம் வரும் போது அவள்போய்த் தங்கி யிருப்பதற்கு நான் ஒரு மாதின் வீட்டைச் சிபார்சு செய்கிறேன்.

ஜய:—ஓ! நீ என் மகள் விஷயத்தில் இவ்வளவு அக்கறை கொண்டதற்காக நான் அதிக வந்தனம் செலுத்துகிறேன். ஆனால் நாம் பேச ஆரம்பித்த விஷயத்தை மறந்துவிடலாகாது. அதாவது சீனனுடைய விஷயம். அதைத் தெரிந்துகொள்ள நான் மிகவும் ஆவலுள்ளவளாக இருக்கிறேன்.

புஷ்பா:—அப்படியானால் நான் அதை உனக்குச் சொல்கிறேன். அச்சம்பவம் 1810 ஆம் வருஷம் மே மாதம் 31-ந் தேதிக்கும் ஜூன்மாதம் முதல்தேதிக்கு மிடையிலுள்ள இரவில் நடந்ததாகும். ஆகவே அது நடந்து இப்போதைக்கு ஐந்து வருஷங்களாகின்றன. அப்போது இராஜகுமாரராகிய வைரசிங்கம் கோமகன் இராஜ அரண்மனையில் இப்போதவர்வசிக்கும் அறைகளிலேயே வசித்துக் கொண்டிருந்தார். அப்போது அந்தக் கோமகனிடம் சீனன் என்பவனோடு நீலகண்டன், ஜெயராம் என்று இருவருங்கூட கையாட்களாய் இருந்தார்கள். இதில் சீனன் என்பவன் மலையாளத்தான். அவன் குட்டையாயும் தேகக்கட்டுடையவனுயும் அழகாயும் இருந்தான். அவனுக்கு மனைவியும் நான்கு குழந்தைகளும் உண்டு. நல்ல நேரிய நடத்தையுடையவன். குடும்பத்தில் எப்போதும் பட்சமாய்

நடந்து கொள்வான். அவன் மனைவி மிக்க அழகுடையவள். அவள்மீது அவன் மிக்க அன்பு வைத்திருந்தான். சமையல் கட்டிற்கு முன்னுள்ள முதல் வாயிற்படியினருகில் இருக்கும் அறைகளில் அவன் தன் குடும்பத்துடன் வசித்துவந்தான். அந்த அறைகளிலிருந்து வைரசிங்கம் கோமகனுடைய அறைக்குச் செல்ல பாதையுண்டு. கோமகனுடைய அறைக்குப் பக்கத்து அறையில் நீலகண்டன் என்னும் வேலையாள் வசித்துவந்தான். 1810-ம் வருஷம் மேமாதம் 31-ந் தேதி இரவு சீனன் வழக்கம்போல் போஜனமருந்தியதும் நீலகண்டனுடைய அறைக்குச் சென்றான். அவர்களிருவரும் அதிக சிநேகமானவர்களாகையால் முன்னெச்சரிக்கையின்றியும் தாராளமாக நீலகண்டனுடைய அறைக்குள் சீனன் செல்வது வழக்கம். ஜயதேவி இனிமேல்தான் நீ கவனமாகக் கேட்கவேண்டும். சீனன் களங்கமின்றி கதவைத் திறந்துகொண்டு உள்ளே ஒரு அடி எடுத்து வைத்ததும் அங்கு தோன்றிய காட்சியைக் கண்டு ஒன்றும் தோன்றாமல் திக்பிரமையடைந்து, "ஐயோ கடவுளே! அமிர்தவல்லி ராஜகுமாரி! இங்கே" என்று பேயைக்கண்டு பயந்தவன் போல் தாழ்வாரத்தின் வழியே ஓடினான். அவன் அவ்வாறு கலவரத்துடன் ஓடும்போது சரியாய்க் கவனியாமல் தன் எதிரில் வந்துகொண்டிருந்த ஜெயராம் என்பவன்மீது மோதிக்கொண்டான். இவன் கூறியவார்த்தைகள் ஜெயராம் செவிகளில் நுழையவே அதைப்பற்றி அறிய விரும்பினான். ஆயினும் அவன் தன் மீது மோதிக்கொண்டதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டபோது அவன் மனதில் ஏதோ கலக்கமுண்டாயிருப்பது தெரிந்ததால் அதை அவனே மறைக்கப்

பார்க்கும்போது தான் கேட்கலாகாதெனப் பேசாமல் இருந்துவிட்டான்.

சீனன் ஜெயராமனைக் கண்டு, "நீ நமது நீலகண்டனைக் காணவா போகிறாய்?" என்று கேட்டான். ஜெயராம் 'ஆம்' என்று பதில் சொன்னதால் சீனன் மிக்க படபடப்புடன் "அவன் வேலையாய் இருக்கிறான். நீ அவனை இச்சமயம் காணமுடியாது. என்னுடன் வா" என்று அவன் கரத்தைப் பற்றி அழைத்துக்கொண்டு தன் வாசஸ்தலம் சென்று மது பானம் அளித்து உபசரித்தான். ஜெயராம் சுமார் ஒருமணி நேரம் அங்கிருந்தான். பிறகு அவன் உத்தரவுபெற்றுச் செல்லுகையில் சீனன் எதற்காக அப்படிப்பட்ட மனக்கலக்க மடைந்தானென்றும், தாழ்வாரத்தில் தன்மீது மோதிக் கொண்டபோது அவ்வாறு கூறியதற்குக் காரணமென்ன வென்றும் சிந்தித்துக்கொண்டே சென்றான். சீனன் இரவு பத்துமணி வரையில் தன் மனைவியோடு கூடவே இருந்து விபாதியுற்றிருக்கும் தன் குழந்தை சுகமாய் நித்திரை செய்கிறதா என்று பார்த்துவிட்டுக் கடைசியில் தான் படுக்கும் அறைக்குச் சென்றான்.

இவ்வாறு சொன்னபோது புஷ்பாங்கி ஒரு டம்ளர் மதுபானம் அருந்தினாள். ஜயதேவியும் அவ்வாறே சிரமபரிகாரம் செய்துகொண்டாள். பிறகு புஷ்பாங்கி தான் சொன்ன விவரத்தை மீண்டும் கூற ஆரம்பித்துப் பின்வருமாறு சொன்னாள்:—வைரசிங்கம்பிரபு எங்கோ நாடகத்திற்குச் சென்றிருந்து அர்த்தராத்திரியில் அரண்மனைக்கு வந்து தன் அறைக்குச் சென்றார். நீலகண்டன் அங்கு வேலை செய்துகொண்டிருந்தான். அதன்பிறகு இரண்டுமணி நேரம் அரண்மனையின் அப்பாகத்தில் எப்படிப்பட்ட சந்தடியுமில்லை. இரவு சுமார் இரண்டரை மணிக்குக் கூடத்திலுள்ள காவல்காரன் "கொலை,

கொலை'' என்னும் சத்தத்தைக் கேட்டு திடுக்கிட்டு எழுந்து பார்த்தபோது வைரசிங்கம் கோமகன் மிரட்சி யடைந்த முகத்தோடும் இரத்தக்கறைகள் பட்ட சட்டையோடும் தன் எதிரில் நிற்பதைக் கண்டான். நீலகண்டன் அவருடன் இருந்தான். உடனே டாக்டரை அழைத்துவர ஒருவன் ஓடினான். மற்றொருவன் பாராக்காரனை அழைத்துவரச் சென்றான். இராஜகுமாரர் நீலகண்டனோடு தன் அறைக்குச் சென்றார். ஜெயராம் தூக்கத்திலிருந்து கலவரத்தோடு எழுந்தவன் உடனே அங்கு சென்றான். உடனே அனைவரும் சீனன் எங்கே என்று விசாரிக்கத் தொடங்கினார்கள். அப்போது நீலகண்டன், "இராஜகுமாரன் சற்றேறக்குறைய கொலை செய்யப்பட்டார் என்று அவரிடம் கூறு'' என்று ஜெயராமிடம் சொன்னான். அவனும் துரிதமாய் சீனன் அறையை நோக்கி ஓடினான். வழியில் நீலகண்டனுடைய தாயும் காவல்காரனும் வந்தார்கள். மூவருமாக சீனன் அறைக்கு ஓடினர். அறையில் நுழைந்ததும் அவர்கள் கண்ட கோரக்காட்சியால் திடுக்கிட்டு அலறினார்கள்.

சீனன் தன் படுக்கையில் சவமாய்க் கிடந்தான். அவன் கழுத்து மிக்க கோரமாய் அறுக்கப்பட்டிருந்தது. அவன் தேகத்தில் பூரண உடைகள் இருந்தன. அங்கிருந்த முகம் கழுவும் தண்ணீர் பாத்திரத்தில் பாதி இரத்தம் கலந்திருந்தது. அவன் சட்டை நாற்காலியின்மீது வைக்கப்பட்டிருந்தது. அவனது கடிகாரம் தலைமாட்டில் இருந்தது. சீனன் யாராலோ கொல்லப்பட்டான் என்று ஜெயராம் மனதில் உடனேபட்டது. அவன் அக்காட்சியை முதலில் கண்டபோதே இது தற்கொலையல்ல. குரூரமாய் நடந்த கொலையே என்று ஸ்திரமாய் அறிந்துகொண்டான். ஜெயராமுடன் சென்ற நீலகண்டனுடைய தாயும், காவல்காரனும் உள்ளே

செல்லாமல் கோரக்காட்சியைக் கண்டு பிரமிப்படைந்து வெளியிலேயே அசைவற்ற மரம்போல் நின்றிருந்தார்கள். இறந்துகிடந்த சீனனுடைய மஞ்சத்தருகில் ஜெயராம் சென்றபோது அங்கே ஒரு துண்டுக்கடிதம் இருப்பதைக் கண்டு அதை எடுத்துப் பார்த்தான். அக்கடிதம் சீனனால் எழுதப்பட்டிருந்தது. ஆனால் அது முடிவுபெறாமல் அரை குறையாய் இருந்தது. ஜெயராம் அதிலிருந்த முதல் இரண்டொரு வரிகளை வாசித்ததும் ஒரு பெரிய பிரமாதமான இரகசியத்தை அறிந்துகொண்டான். அன்று மாலை சீனன் தன்னைச் சந்தித்துத் தன்மீது மோதிக்கொண்டபோது, "ஐயோ கடவுளே! அமிர்தவல்லி இராஜகுமாரி இங்கே" என்று கூறியதன் அர்த்தம் இப்போது அவனுக்கு நன்றாய் விளங்கி விட்டது. அதனுடன் இக்கொலை நடந்தகாரணமும் மற்றும் யாவும் அவனுக்கு நன்கு விளங்கிவிட்டது. அச்சமயம் ஆட்கள் வரும் சத்தங்கேட்டதால் ஜெயராம் தன்னிடம் அகப்பட்ட அக்கடிதத்தை மடியில் மறைத்து வைத்துக்கொண்டான். மறுநிமிஷம் ஒரு சார்ஜண்டும் சில போலீஸ்காரர்களும் அறைக்குள் வந்தார்கள். அவர்கள் எதையோ விசாரித்துப் போய்விட்டார்கள். ஜெயராமன் தனக்கு அகப்பட்ட அக்கடிதத்தைப் படிக்கவேண்டுமென்று மிக ஆவலாக இருந்தான். இதோ அக்கடிதம் என்னிடம் இருக்கிறது; காண்பிக்கிறேன், பார்.

ஜய:—அதே கடிதமா உன்னிடம் இருக்கிறது. அந்தக் கடிதம் உன்னிடங் இருக்கிறதா?

புஷ்பாங்கி, "ஆம்; அதே கடிதம்" என்று சொல்லிக் கொண்டு எழுந்துசென்று தன் கைப்பெட்டியைத் திறந்து ஒருகட்டு கடிதங்களைக் கொண்டுவந்தாள். அக்கட்டிலிருந்த அப்போது வேண்டிய கடிதத்தையெடுத்து ஜயதேவியிடம்

கொடுத்தாள். அது அவ்வளவாகப் படிப்பில்லாத ஒருவன் எழுதியதுபோல் காணப்பட்டது. பிறகு இருவருமாகச் சேர்ந்து பின்வரும் விஷயத்தைப் படித்தார்கள்:—

நான் எப்படிப்பட்ட தூண்டுதலுமின்றி யதார்த்தமாக வழக்கம்போல் உன் அறையில் இப்போது நுழைந்தேன். அவ்வறையில் தவறான காரியம் நடந்துகொண்டிருக்கிறதென்பதை நான் அறியேன். ஆனால் கடவுளே! நான் பார்த்ததென்ன? நீயும் அமிர்தவல்லி ராஜகுமாரியும் பரஸ்பரம் கூடிக்குலாவியதைக் கண்டு ஆச்சரியமும் திக்பிரமையும் அடைந்தேன். என்ன செய்வதென்று எனக்குத் தோன்றவில்லை. நான் கூடியவரையில் ஒழுக்கத்தையும் நற்செய்கைகளையும் விரும்புகிறவன் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. நான் அதை என் மனைவியிடமும் ஜெயாமிடமும் சொல்லாமல் மறைத்துவைக்க முயலுகிறேன். ஆயினும் நான் உன்னையோ அமிர்தவல்லி இராஜகுமாரியையோ கண்டமாத்திரத்தில் என் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் இரகசியம் என் முகத்தில் தெரிந்துவிடாதா? என் மனைவி முதலியோர் சந்தேகப்பட்டு ஏதேனும் கேட்பார்களாயின் நான் என்னபதில் கூறுவது? பொய் சொல்வதா? நான் பொய்யை அறவே வெறுக்கிறவன். மேலும் எனக்குச் சம்பந்தமில்லாத ஒரு ரகசியத்தை மூடிவைப்பதற்காக நான் என் ஆயுள் முழுதும் பொய்களை ஜோடித்துக்கொண்டே இருக்கவேண்டும். நான் என்னசெய்வது? இந்த இரகசியத்தை வெளியிடவும் நான் விரும்பவில்லை. ஆகவே நான் இராஜ அரண்மனையை விட்டுச் சென்று வேறு எங்கேனும் உத்தியோகம் தேடிக்கொள்வதைத் தவிர வேறுவழி எனக்கில்லை. அவ்வாறு போய்விடுவதால் இக்குற்றவாளிகளைக் காணவேண்டிய அவசியம் எனக்கு ஏற்படாதாகையால் பொய்சொல்ல வேண்டியிராது.

ஆகவே நான் நாளையதினம் இந்த அரண்மனையை விட்டுப் போக உத்தேசித்திருக்கிறேன். நான் இக்கடிதம் இன்னாருக்கென்று ஏன் எழுதவில்லையென்றால்...."

இவ்வாறு அக்கடிதம் அரைகுறையாக முடிக்கப்பட்டிருந்தது. இதைப்படித்ததும் ஜயதேவி ஆச்சரியமடைந்தாள். அக்கடிதம்பற்றி ஜயதேவியின் அபிப்பிராயம் யாதென புஷ்பாங்கி கேட்டதற்கு அவள் தான் பிறகு சொல்வதாகவும், விஷயம் பூராவையும் சொல்லி முடித்துவிடும்படியும் கேட்டாள்.

அப்போது புஷ்பாங்கி, "இன்னும் சொற்பம்தான் சொல்லவேண்டியிருக்கிறது. ஜெயராம் அக்கடிதத்தை ஒளித்து வைத்ததுடன் அதைப்பற்றி யாரிடமும் பிரஸ்தாபிக்கவேயில்லை. பிறகு ஏதோ பெயரளவுக்கு விசாரணையும் நடந்தது. சினன் தானே தற்கொலை செய்துகொண்டான் என்று சொல்லும்படி சாட்சிகளை ஜோடித்து அவ்வாறே தீர்ப்பு கூறிவிட்டார்கள். அதாவது சினன் நடு இரவில் வைரசிங்கம் கோமகனைக் கொல்லமுயன்றதுடன் தன்னையும் தற்கொலை செய்துகொண்டான் என்பதே தீர்ப்பு" என்றாள்.

ஜய:—ஜெயராம் சங்கதி பிறகு எப்படிமுடிந்தது?

புஷ்பா:—விசாரணை நடக்கும்போது அதில் அவன் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பித்திருந்து விசாரணையெல்லாம் முடிந்ததும் மெதுவாக அரண்மனைவேலையை விட்டுவிட்டான். பிறகு அவன் எங்கள் வீட்டில் வேலைக்காரனாய் அமர்ந்தான். அப்போது என் கணவன் பிழைத்திருந்ததால் நாங்கள் வெளியே வசித்துவந்தோம். அப்போது ஜெயராமிடம் ஏதோ இரகசியம் புதைபட்டுக்கிடப்பதை நான் அறிந்தேன். அவன் அடிக்கடி பேசும்போது வெளியிடும் ஒன்றிரண்டு வார்த்தைகளைக்கொண்

டும், அவன் வைரசிங்கம் கோமகனிடம் வேலையாளாக இருந்தான் என்பதைக்கொண்டும் அவன் ஏதோ அரண்மனை இரகசியத்தை அறிந்துகொண்டிருக்கிறான் என்று நான் நிச்சயித்தேன். நாளடைவில் நான் அவ்விஷயங்களை அவனிடம் விசாரித்தேன். அப்போது அவன் சீனனுடைய சங்கதிகளையெல்லாம் விவரமாகக்கூறி இக்கடிதத்தை என்னிடம் கொடுத்தான். அக்கடிதத்தைத் தன்னிடமிருந்து மற்றொருவரிடம் ஒப்படைப்பதில் அவன் மிகச் சந்தோஷமும் அடைந்தான். பிறகு அவன் வேறு நல்ல உத்தியோகம் பெறுவதற்காக என் வீட்டைவிட்டுப் போய்விட்டான். அதன் பின்னர் அவனுடைய நிலைமை யாதாயிற்றென்று எனக்கொன்றும் தெரியாது.

ஜய:—ஆனால் இந்த விஷயத்தைப்பற்றி ஜெயராமுடைய அபிப்பிராயம்தான் என்ன?

புஷ்பா:—அவன் நினைப்பதென்ன? சீனன், அமிர்தவல்லி ராஜகுமாரிக்கும் நீலகண்டனுக்கு மிடையில் கள்ளக் காதல் இருப்பதைக் கண்டுவிட்டதால் நீலகண்டனே தன் குற்றத்தை மறைக்கும் பொருட்டு சீனனையும் கொலை செய்துவிட்டுத் தான் அகப்பட்டுக்கொள்ளாம லிருக்கும்பொருட்டு வைரசிங்கம் பிரபுவுக்கும் படுகாயப் படுத்திப் பின் ஓடி ஒளிந்திருக்கவேண்டும் என்பதைத் தானே அவனும் கருதவேண்டும்.

ஜயதேவி:—அப்படியானால் இதெல்லாம் நீலகண்டனுடைய வேலையே என்று நீ நிச்சயித்திருக்கிறாயா?

புஷ்பா:—அதில் சந்தேகமென்ன இருக்கிறது? ஜெயராம் இவ்வாறு பொய்க்கடிதம் எழுதி வேண்டுமென்றே பழி சாட்டுகிறான் என்று நீ நினைக்கிறாயா? அல்லது சீனன்

தான் கொலையும் செய்துவிட்டுத் தற்கொலையும் செய்து கொண்டான் என்று நினைக்கிறாயா?

ஜய:—இல்லை, இல்லை. ஜெயராம் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் நான் பூரணமாக நம்புகிறேன். மேலும் இக் கடிதமும் பொய்க்கடிதமல்ல என்பதும் உண்மையே. கோரமான கொலைசெய்யப்பட்டான் என்பதை நம்புகிறேன். ஆனால் நீலகண்டன்தான் கொலைசெய்தான் என்பதை நம்ப என்னால் முடியவில்லை.

புஷ்பா:—ஐயோ கடவுளே! அப்படியானால் யார்தான் சீனனைக் கொலைசெய்திருக்கவேண்டும் என்பது உன் அபிப்பிராயம்?

ஜய:—ஜெயராம் இவ்விஷயத்தைப்பற்றி என்ன அபிப்பிராயங் கொண்டிருக்கிறான் என்பதை நீ கூறினால் பிறகு சுலபமாய்க் கண்டுபிடித்து விடலாம்.

புஷ்பா:—அவன் அப்படியொன்றும் விளக்கிக் கூறியதாக எனக்கு ஞாபகமில்லை. அவன் நடந்த விஷயத்தைக் கூறிவிட்டு இக்கடிதத்தை என்னிடம் கொடுத்து நானே ஒருவித முடிவுக்கு வரும்படி விட்டுவிட்டானே தவிர அவனுடைய அபிப்பிராயம் இன்னதென்று கூறவில்லை.

ஜய:—ஆயினும் நீ இவ்விஷயத்தில் அபிப்பிராயப் படுவது போல் ஜெயராம் நினைத்திருக்கமுடியாது. விஷயம் வேறு என்பதை அவன் அறிந்திருப்பான் என்பதை நீ நிச்சயமாக நம்பு.

புஷ்பா:—அப்படியானால் எனக்குப் பயங்கரமாக இருக்கிறதே. யார்மீது இப்பழியைச் சுமத்துவதென்று தெரியவில்லையே?

ஜய:—நீ அவசரப்பட்டு முடிவுக்கு வந்துவிட்டாய் என்றே நான் நினைக்கிறேன். நீ நிதானமாக எல்லாவிஷயங்களை யும் யோசித்துப்பார். இந்த இரகசியத்தை யறிந்ததும் ஜெயராம் அவ்வளவு அச்சப்படவேண்டிய அவசிய மென்ன? அவன் விரைவில் உண்மையை அறிந்து கொண்டுவிட்டான் சாதாரண வேலையாளாகிய நீல கண்டன் கொலைசெய்திருந்தால் அவன் அதை வெளி யிட அவ்வளவு பயந்திருக்கமாட்டான். ஆனால் அவன் பயங்கரமான உண்மையை அறிந்துகொண்டதாலேயே பயந்தான்.

புஷ்பா:—ஐயோ கடவுளே! பேசுவதை ஜாக்கிரதையாகப் பேசு. யாரேனும் மறைந்திருந்து இதைக் கேட்டுவிடப் போகிறார்கள். இதோ நான் போய் நமது அறையைச் சுற்றிலும் பார்த்துவிட்டு வருகிறேன்.

இவ்வாறு சொல்லிக்கொண்டே அவள் நான்கு பக்கங் களிலும் பார்த்துவிட்டு வந்தாள். புஷ்பாங்கி வந்து உட் கார்ந்ததும ஜயதேவி, “உண்மையை மறைத்துவிட யாரா லும் முடியாது. உண்மையான விஷயம் பயங்கரமானதாக இருந்தபோதிலும் அதை வெளியிட்டே ஆகவேண்டும். நீல கண்டன் கொலை செய்திருப்பான் எனச்சொல்வது தவறாகும். அரசவம்சத்தைச் சேர்ந்த ஒருமாது அவன்மீது காதல் கொண்டதால் அவனைக் காக்கவேண்டிய பொறுப்பு அவ ளுடையதல்லவா? அவன்மீது எத்தகைய அபவாதமும் ஏற் படாதபடி அவள் ஏற்பாடு செய்வாள் அன்றோ? ஆதலின் அவன் சினனைக் கொல்லவேண்டிய அவசியமில்லை, ராஜ குமாரியே அவனைத் தூண்டி யிருக்கலாமென்று சொல்வதா யிருந்தால் அப்போது வைரசிங்கம் கோமகனைத் தாக்கியதும் நீலகண்டனுகவேதானே இருக்கவேண்டும். ஒரு குற்றத்தை

மறைக்க இன்னொரு குற்றம் செய்யவேண்டிய அவசிய மென்ன? ஆகவே நீ அபிப்பிராயப்படுவது தவறு" என்று அச்சமின்றிக் கூறினாள்.

புஷ்பா:—அப்படியானால் யார் கொலை செய்திருக்கக்கூடு மென்று நீ சந்தேகப்படுகிறாய்?

ஜய:—அன்புள்ள புஷ்பாங்கி! நமக்கு இதைப்பற்றிப் பொய் பேசவேண்டிய அவசியமில்லை. நாம்தான் இங்கே இருக்கின்றோம். நாம் ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்துவிடலாகாது. நான் உன்னிடம் உண்மையை விட்டுச் சொல்கிறேன். அமிர்தவல்லி அரசகுமாரியின் தூண்டுதலுக் கிணங்கி வைரசிங்கம் கோமகனே சீனனைக் கொன்றான் என்பது நிச்சயம்.

பிறகு சிறிதுநேரம் இருவரும் வாய்திறந்து பேசாமல் மௌனம் சாதித்திருந்தனர். சற்றுநேரத்துக்குப் பின்னர் புஷ்பாங்கி மெதுவாக, "ஆம். நீ சொன்னபடிதான் இருக்கும். அக்கடிதம் சீனனால் வைரசிங்கம் கோமகனுக்கு எழுதப்பட்டதுதான் என்பதில் சந்தேகமில்லை. நான் முதலில் அது நீலகண்டனுக்கு எழுதப்பட்டதோ என்று நினைத்தேன்" என்றாள். அப்போது ஜயதேவி மீண்டும் பேச ஆரம்பித்து, "அதில் சந்தேகமில்லை. சீனன் அக்கடிதத்தைப் பாதி எழுதி முடித்ததும் வெறுப்புடன் அதை வைத்துவிட்டுத் தூங்கி இருக்கிறான். அப்போது வைரசிங்கம் உள்ளே புகுந்து இந்தப் பயங்கரமான காரியத்தை முடித்திருக்கிறான். இதனால் சீனனுடைய தூக்கம் நிரந்தர தூக்கமாய்விட்டது. கோமகன் சிறிதும் அஞ்சாமல் அக்காரியத்தைச் செய்திருக்கிறான். ஏனெனின் அவன் கொலை செய்துவிட்டுத் தன் அறையில் புகுவதற்கு முன்னர் இன்னும் பல காரியங்களையும் செய்திருக்கிறான்," என்று கூறினாள்.

அப்போது புஷ்பாங்கி, "வைத்தியப் பரீட்சையில் அந்தக் கோமகனின் காயம் படுகாயமாய் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறதே" என்று கேட்டாள். அதற்கு ஜயதேவி, "இருக்கலாம்; அதிலென்ன விசேஷமிருக்கிறது. தான் நினைத்ததற்கு மாறாக அதிக காயம் ஏற்பட்டுவிட்டிருக்கலாம்" என்றாள். புஷ்பாங்கி, தன் தோழியைப் பார்த்து, "பார்த்தாயா! அரசர்களுடைய அரண்மனையில் இப்படிப்பட்ட அக்கிரமங்களெல்லாம் நடக்கின்றன. நான் இதை சண்பகவல்லி ராஜகுமாரியிடம் சொல்லாமல் இருப்பது மிகவும் கஷ்டமாகத்தான் இருக்கிறது" என்றாள். இத்துடன் அவர்களுடைய சம்பாஷணை முடிந்தது.

156 - வது அத்தியாயம்

இப்போது நாம் பரிதிபுரத்தில் நடக்கும் ஒரு பரிதாபகரமான காட்சியைக் கவனிப்போம். முன்பே அங்கு பற்பல அற்புத சம்பவங்கள் நடந்ததை நாம் இந்நாவலில் பார்த்திருக்கிறோமல்லவா? பரிதிபுரத்தின் மகா பயங்கரமான சிறைவாயிலில் நமது ஜகதீசன் ஒருநாள் இரவு பத்து மணி சுமாருக்கு நின்றுகொண்டு கதவைத் தட்டினான். உடனே அங்கு காவல் புரிந்துகொண்டிருந்த காவல்காரன் கதவைத் திறந்தான். அப்போது ஜகதீசன் அக்காவல்காரனிடம், "நாளையதினம் தூக்குமேடையில் ஏறப்போகும் இரத்தினபுரி மாது ஒருத்தியைக்காண நான் இங்கு வந்திருக்கிறேன்" என்று கூறினான். அப்போது அவன், "இப்போது அகாலவேளையாகையால் கைதிகளைக் காணமுடியாது" என்றான். உடனே ஜகதீசன் தன்னிடமிருந்த அனுமதிச் சீட்டைக் காண்பித்து, "இதோ பார்! சர்க்கார் அதிகாரிகளின்

அனுமதிச்சீட்டைப் பெற்றிருக்கிறேன்,'' என்றுகூறி அதை எடுத்துக் காண்பித்தான்.

அக்காவல்காரன் அதைப் படித்துப் பார்த்துவிட்டு மிக்க மரியாதையுடன், தன் பின்னால் வரும்படி ஜகதீசனிடம் கூறிவிட்டு அவன்முன்செல்லலானான். அவன் இருட்டாக இருந்த தாழ்வாரத்தின் வழியே ஜகதீசனை அழைத்துச் சென்று கோடியிலிருந்த ஒரு பெரிய அறைக்கு அழைத்துச் சென்றான். அங்கே வேறு இரண்டு மூன்று காவல்காரர்கள் புகைச் சுருட்டு பிடித்துக்கொண்டும் மதுபானம் அருந்திக் கொண்டு மிருந்தார்கள். அங்கிருந்த ஒரு காவல்காரன் ஜகதீசனை வேறு பக்கமாக மற்றொரு தாழ்வாரத்தின் வழியே இன்னும் தூலைவில் அழைத்துக்கொண்டு சென்று அங்கிருந்த ஒரு பெரிய அறையைக் காண்பித்து, "அதோ அந்த அறையில் இராஜம்மாளுடன் மற்றும் மூவர் நாளை தூக்கிலிடப்பட வேண்டியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடன் மத உபன்னியாசகரும் இருக்கிறார். அந்த அறையில் ஒரு சிறுவிளக்கு இருக்கிறது'' என்றான். அப்போது ஜகதீசன், "அவர்கள் இப்போது எப்படிப்பட்ட மனோபாவத்துடன் இருக்கின்றனர். அவர்கள் சிறிதும் பொருட்படுத்தாமல் அலட்சியமாகவே இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதுமெய்தானா'' என்று கேட்டான்.

அதற்கு அந்தக் காவலாளி, "இவ்வளவு ஏன் கஷ்டம்? இப்படி வாரும். ஒதுங்கிநின்று பார்த்துக்கொண் டிருந்தால் அவர்களுடைய சமாசாரம் தெரிந்துவிடுகிறது'' என்று கூறிக் கொண்டே அவனை அவ்வறையின் சமீபத்தில் ஓரிடத்தில் நிறுத்தினான். அவர்களிருவருமாக அவ்வறையில் என்ன நடக்கிறது என்பதைக் கவனித்தார்கள். அந்த மூன்று மனிதர்களும் ஏதோ குஷாலாகப் பாடுகிறார்கள். மறு நிமிஷமே

பித்தம் பிடித்தவர்களைப்போல் எழுந்து ஓடியாடி அம்மத போதகருடன் சண்டையிடுபவர்கள்போல் குதிக்கிறார்கள். உடனே பணிவுடன் அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்கிறார்கள். இவ்வாறெல்லாம் அவர்கள் மனக் குழப்பத்துடன் நடந்துகொள்வதைக் கண்ட ஜகதீசன் உண்மையிலேயே அதிக இரக்கமடைந்து அப்பரிதாபகரமான காட்சியைப் பார்க்கமுடியாமல் காவல்காரனிடம், "நாம் இவ்விடம் விட்டுப்போவோம் வா" என்றான்.

பிறகு அவர்களிருவரும் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு மற்றொரு தாழ்வாரத்தின்வழியே மாதர்கள் அடைக்கப்படும் பகுதிக்குச் சென்றனர். அங்கே ஒரு அறையின் கதவைத் திறந்து "ஐயா, நீர் அம்மாளைத் தனியே பார்க்க விரும்புகிறீர்களா?" என்று அக்காவல்காரன் கேட்டான். அதற்கு ஜகதீசன், "ஏன்? அங்கே வேறு யாரேனும் இருக்கிறார்களோ? நான் அம்மாளைத் தனியாகத்தான் பார்க்க வேண்டும்" என்றான். அப்போது காவற்காரன் "அம்மாளுடன் யாருமில்லை. ஆயினும் மதபோதகர் இப்போது வருகிறவேளை, ஆகவே நீர் உள்ளேபோய்ப் பேசிவிட்டு வருகிறவரையில் நான் இங்கேயே இருந்து உள்ளே யாரையும் விடாமல் இருக்கிறேன்" என்றான். உடனே ஜகதீசனை அறையில் விட்டுவிட்டு அக்கதவைச் சாத்திக்கொண்டான். ஜகதீசன் அறையில் மெதுவாக நடந்துசென்று இராஜம்மாள் இருந்த இடம்போய்ச் சேர்ந்தான். அங்கே அவர்கள் இருவர்மட்டுமே இருந்தனர்.

இராஜம்மாள் அங்கு போடப்பட்டிருந்த கரடு முரடான ஒரு பலகையின்மீது படுத்திருந்தாள். எதிரில் இருந்த ஒரு சிறு மேஜையின்மீது மெழுகுவர்த்தி விளக்கு மங்கலாக சிறு பிரகாசத்துடன் எரிந்துகொண்டிருந்தது. அந்தப் பயங்கர

அறையில் அந்த நடுநிசி வேளையில் அவள் முகம் இன்னும் பரிதாபகரமாகவும் பயங்கரமாகவும் காணப்பட்டது. அவள் சிறைப்பட்டுச் சொற்ப வாரங்களுக்குள் அவள் முகத்தில் அபாரமான மாறுதல் ஏற்பட்டுவிட்டது. அவள் முகத்தை செயற்கை யழகுகளால் மறைத்துக்கொண்டு தன் கொடிய குணம் வெளியாகாமலிருக்கும்படி செய்ய அந்தச் சிறையில் எத்தகைய வசதிகளும் கிடையாதல்லவா? ஆகவே அவளது மனோபாவத்தையே பளிங்குபோல் அவளது முகம் காட்டியது. மேலும் தன் காலம் முடிந்துவிட்டதென்னும் கவலையாலும், சரியான சுகவசதிகள் சிறையில் இல்லாததாலும் அவள் தேகம் எலும்புக்கூடுபோல் காணப்பட்டது. முகத்தில் ஒளி இல்லை. கண்கள் ஆழத்தில் விழுந்து கிடந்தன. பொய்ப் பற்களும் கட்டிக்கொண்டு ஜனங்களை ஏமாற்ற வழியில்லாததால் வாயும் பொக்கை வாயாய் இருந்தது. அவளது கூந்தலும் நரைமயிர் கருக்குந்தைலம் தடவக்கூடிய சௌகரியமில்லாததால் வெள்ளையாக நரைத்துப்போயிருந்தது தெரிந்தது. சுருங்கக் கூறுமிடத்து அவளைக் கண்டதும் நமது ஜகதீசன் இவள்தானோ இராஜம்மாள் என்று சந்தேகிக்கும்படியாய்விட்டது. இப்படிப்பட்ட விகாரரூபமுடையவளும், கொடிய குணமுடையவளுமான ஒரு மாதை ஜகதீசன் தன் வாழ்க்கையிலேயே கண்டதில்லையென்றும் கூறலாம்.

ஜகதீசன் அந்த அறையைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தது முதல் அவள் அவனையே உற்று நோக்கிக்கொண்டிருந்தாள். அவள் தன்னை அவ்வாறு கவனிக்கிறாள் என்பதை உணர்ந்த அவன் சற்று பீதியடைந்தான். அவன் அவளைக் கடைசி முறையாகப் பதினைந்து தினங்களுக்குமுன் கோர்ட்டில் அவள்மீதும் அவள் நியமித்த ஆட்கள், மூவர் மீதும் வழக்கு விசாரணை நடைபெற்றபோது பார்த்ததுதான்.

அப்போதும் இராஜம்மாள் முகமூடியும் போர்வையும் அணிந்துகொண்டிருந்ததால் அவள் முகத்தில் ஏற்பட்டு வந்த மாறுதலை அவன் கவனிக்கவில்லை. இப்போது அவளைப் பார்த்த மாத்திரத்தில் ஜகதீசனுக்கு அவளிடம் அருவருப்பும், வெறுப்பும் தோன்றியது. இதை அவளும் ஒருவாறு அவனுடைய முகக்குறியால் அறிந்துகொண்டுவிட்டாள்.

ஆகவே அவள் அவனைப் பார்த்து, "ஜகதீசா! நான் அதிகம் மாறுதலடைந்திருப்பதை நீ காண்கிருயா?" என்று வினவினுள். உண்மையில் ஒரு மாது வீணுகக் கஷ்டப்படுவதைச் சகியாத அவன் நல்லெண்ணத்துடனும் அனுதாபத்துடனும், "நீ இவ்விடம் சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் இருப்பாய் என்று நான் எப்படி எதிர்பார்க்கமுடியும்? நீ இவ்வாறு பரிதாபமான நிலைமையில் இருப்பதற்காக நான் உண்மையில் வருந்துகிறேன். அப்படி வருந்தாமலிருப்பது என் இயற்கை சுபாவத்துக்கு விரோதமாகும். ஐயோ பாவம்! உன் நிலைமை எனக்குத் தெரியாதா?" என்று கூறினுன். அப்போது ஜகதீசன் நிலைமை என்று கூறியது தூக்கிலிடப்படுவதுதான் என்று அறிந்துகொண்ட இராஜம்மாள் மிகவும் துக்கத்துடன், "சந்தர்ப்பமா! ஓ! என் மாணத்தைப்பற்றிதானே நீ கூறுகிருய்? ஆம், ஆம். அதோ தூக்கிலிடுவோன் என்முன் நிற்கிருன். மாணம் சமீபித்துவிட்டது. ஆ! பயங்கா அவஸ்தை" என்று கூவிக்கொண்டே அச்சத்துடன் நடுநடுங்கினுள்.

அப்போது ஜகதீசன் அங்கிருந்த ஒரு சிறு முக்காலியின்மீது உட்கார்ந்துகொண்டு மெதுவாக, "ஏனம்மா! நீ இறப்பதற்குத் தயாராக இல்லையா?" என்று கேட்டான். உடனே அவள் வலிப்பு வந்தவள்போல் பதறிக்கொண்டே, "ஐயோ கடவுளே! நீ அப்படியும் கேட்கலாமா? என்னைக்

காப்பாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்காகவல்லவோ உன்னை வரவழைத்தேன். இப்போது நீ இப்படிச் சொல்கிறாயே?" என்று கேட்டாள். அப்போது ஜகதீசன் மெதுவாகவும் விசனத்துடனும் தலையை அசைத்தான்.

அதைக்கண்ட இராஜம்மாள் ஒன்றும் தோன்றாமல் பதைபதைத்து, "ஏன் நீ அவ்வாறு தலையை அசைக்கிறாய்? அதன் பொருள்தான் என்ன?" என்று ஆவலுடன் கேட்டாள்.

ஜகதீசன்:—நான் நினைப்பதை நீ தெரிந்துகொள்ளவில்லையா? நீ எதற்கும் தயாராக இருப்பதாகவும், மதபோதகர் வந்து சமயபோதனை செய்யட்டுமென்று கேட்டுக் கொண்டதாகவும் கேள்விப்பட்டேனே. ஆகவே நீ 'சாகிற காலத்தில் சங்கரா' என்பதுபோல் மரணத்துக்குத் துணிந்துவிட்டதால்தான் சமயபோதனை கேட்கவும் தயாராய்விட்டாய் என்று கருதினேனே.

இராஜம்மாள்:—ஓ! சமயபோதகரா! அவர் சொர்க்கத்தைப் பற்றியும் நரகத்தைப்பற்றியும் என்னென்னமோ சொல்கிறாரே. சொர்க்கம் இன்பந்தரக்கூடியதென்றும், நரகம் என்பது தீயினாலான பிரதேசமென்றும் கூறுகிறார். ஆ! நானும் நரகத்தை என் கனவில்கண்டேன். என்ன பயங்கரம்! வேண்டாம்! வேண்டாம்! மரணம் வேண்டாம்.

ஜகதீ:—ஓ! அப்படியல்ல. இறைவன் கிருபாமூர்த்தி என்றும், பாவ மன்னிப்புக் கேட்டால், அவர் மன்னித்து இரட்சிப்பார் என்றும் அவர் கூறவில்லையோ?

இராஜம்:—ஆம்; அப்படித்தான் சொன்னார். ஆனால் என்னைப்போன்ற ஒரு மகா பெரிய பாவிக்கும் மன்னிப்பு கிடைக்குமா என்பது சந்தேகம்தான். கொலையல்லவா?

நான் செய்தபாவம். அது எல்லாப்பாவங்களிலும் தலை சிறந்ததாயிற்றே. என் மனக்கண்முன் எல்லாம் இரத்தக் காடாகவல்லவோ தென்படுகிறது. இதோ நீ நிற்பதைப் பார்த்தாலும் எல்லாம் சிறப்பாகவே தெரிகிறது.

இவ்வாறே கூறிக்கொண்டே அவள் தன் கைகளால் கண்களை மூடிக்கொண்டாள். அவள் துயரப்படுவதைக் கண்ட ஜகதீசன் என்னசெய்வதென்றும், அவளுடன் எப்படிப்பேசுவதென்றும் தோன்றாமல் திகைத்து நின்றான்.

உடனே அவள் திடீரென்று தன் கைகளைக் கண்களினின்றும் அப்புறப்படுத்திவிட்டு, "நீ இங்கே என்னசெய்கிறாய்? என்னை விடுவிக்க நீ வரவில்லையென்றால் இங்கே உனக்கு வேறு என்னவேலை. உன்னிடம் என்னை விடுவிக்கக் கூடிய சக்தி இருக்கிறதென்பதை நான் அறிவேன். நீ ஒரு வார்த்தை கூறினால் அதற்குத் தக்க பலன் ஏற்படும். நீதான் என்னைக் காப்பாற்றவேண்டும். நான் சாகமாட்டேன். நானே கிழவியாய்விட்டதால் சீக்கிரத்திலேயே இயற்கை மரணத்தையடைந்து விடுவேன். அதுவரை சொற்ப காலத்துக்கு என்னை விட்டு வைக்கக்கூடாதா? என் ஆயுட்காலமெல்லாம் சிறையிலிருக்கவும் நான் தயாராக இருக்கிறேன். நான் வெளியே போய்விட வேண்டுமென்று கேட்கவில்லை. பிழைத்திருக்க வேண்டுமென்றே கேட்கிறேன். இனி நான் எப்படிப்பட்ட தீமையும் யாருக்கும் செய்யமுடியாது. மேலும் இந்தப் பயங்கரமான இடத்தில் இருந்துகொண்டு நான் என்ன செய்துவிடமுடியும். இதோ இதைச்சுற்றிலும் பார். கருங்கற்பாறைகளால் சுவர் எழுப்பப்பட்டிருக்கிறதே ஆகவே நீ என் உயிரை மாய்க்கவேண்டியதில்லை" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

ஜக:—இராஜம்மாள்! தயவுசெய்து சிறிது அமைதியுடன் இருந்து நான் சொல்லப்போவதைக்கேள். இன்று பகல் நான் தங்கியிருந்த ஓட்டலுக்கு இச்சிறையில் உள்ள கைதிகளுக்குப் பிரசங்கம்செய்யும் மதபோதகர் வந்திருந்து, நீ என்னைப்பார்க்க விரும்புவதாக ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுவந்தார். அப்போது நான் ஓட்டலில் இருக்கவில்லை. அதற்குமுன் வெளியில் போனவன் இரவு ஒன்பது மணிக்குத்தான் வந்தேன். இவ்வுலகில் இன்னும் சிலமணிநேரம் மட்டுமே இருக்கப் போகும் ஒரு மானிட ஜன்மத்தின் விருப்பத்தை நிராகரிக்க என்னால் முடியவில்லை.

இராஜம்:—இப்போது ஏன் அந்த விவரத்தை யெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறாய். என் நிலைமை இருக்கும் ஆபத்தைக் கவனிக்கும்போது அந்த விவரங்களெல்லாம் எனக்கு அவசியமில்லை. என்னை விடுவிக்க என்ன வழி என்பதைப்பற்றி யோசிப்போம்.

ஜக:—அம்மா! இப்படி அவசரப்படாதே. நான் சொல்வதை நிதானமாகக்கேள். நான் உடனே சிறை நிர்வாகசபை அதிகாரிகளிடம் சென்று என்னைச் சிறையில் அனுமதிக்க உத்தரவுதரும்படி கேட்டேன். அப்படியே அச்சபை அதிகாரியும் என் கோரிக்கைக்கு இணங்கினார். பிறகு நான், உன் தண்டனையை நிறைவேற்றாமல் தடுக்க ஏதேனும் வழி உண்டோ என்று கேட்டேன். அதற்கு அவர் சட்டப்படிதான் காரியங்கள் நடைபெறவேண்டும் என்று ஒரு வார்த்தையுடன் விஷயத்தை முடித்துவிட்டார்.

இராஜம்:—அவர் அப்படி ஒரேயடியாகக் கூறி இருக்கமாட்டார். நீ கூறுவது பொய். எனக்காக நீ ஒன்றும் அதி

கம் சிரமப்படாமலிருப்பதற்கு இவ்வாறு எளிதில் பதில் அளித்துவிட்டாய். நான் தூக்குமேடையில் ஏறிச் சாவதைக்காண நீ விரும்புகிறாய். இவ்வளவு துன்பங்கள் நான் அனுபவிப்பதற்கும் காரணம் நீதானே. நீ பரிதிபுரத்துக்கு வந்து என் விஷயங்களில் தலையிடாமல் இருந்திருந்தால் எனக்கு இக்கஷ்டம் ஏற்பட்டிராதல்லவா? நீ மிகவும் கொடியவனாயும், இரக்கமற்றவனாயும் இருக்கிறாய். என்னை மரணத்தின் பக்கம் ஓட்டுகிறவன் நீயே.

ஜக:—(துயரத்துடன்) இராஜம்மாளே! உன்னைப்போல் ஆபத்தான நிலைமையில் இருக்கும் ஒருவர்மீது கோபித்துக் கொள்ள நான் தயாராக இல்லை. இத்தகைய கேடான நிலைமையை நீ அடைவதற்குக் காரணமாயிருந்தவள் நீயே என்பதை நீ மறக்கலாகாது. எப்படிப்பட்ட ஆபத்தில் கொண்டுபோய்விடுமோ என்றும் யோசியாமல் நீ ஏன் தவறான ஒரு காரியத்தில் ஈடுபட்டாய்? ஆனால் நான் இப்போது உன்னைக் கண்டிப்பதாக நினைக்கவேண்டாம். உன் பாவம் எவ்வளவு பெரிதோ அவ்வளவு பெரிதாகவே இருக்கிறது உனக்கு ஏற்பட்ட தண்டனையும், இத்தண்டனையை அனுபவிப்பதால் உன் பாவம் தீர்ந்துவிடும். இனி இவ்வுலகில் நீ செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. ஆகவே எத்தகைய கவலையுமின்றி நீ மறு உலகம் செல்லத் தயாராகவேண்டும்

இராஜம்:—ஓ! என்னை மன்னித்துவிடு. உனக்கு கோபம் வரும்படி நான் ஏதேனும் தவறாகச் சொல்லிவிட்டிருந்தாலும் என்னை மன்னித்துவிடு. நான் உன்னை இகழ வேண்டுமென்று அவ்வாறு சொல்லவில்லை. நான் சொன்னது தப்பா சரியா என்றுகூட யோசிக்கமுடி

யாத நிலைமையில் நான் இருக்கிறேன். என் மூளை குழம்பிப்போய் இருக்கிறது. நீ தயவுசெய்து எப்படி யாவது என்னைத் தப்புவித்துவிடு. தூக்குமேடையில் ஏறிச் சாகவேண்டிய நிலைமையின் பரிதாபத்தைக் கவனி! என்னுடைய ஜகதீசா! நீயே என்னைக் காப் பாற்றவேண்டும். அம்மரணத்தை நினைக்கும்போதே என் குடல் முழுதும் நடுங்குகின்றது. நான் சாகவே மாட்டேன். என்னைத் தூக்குமேடைக்கு அழைத்துச் செல்ல அவர்கள் வருவார்களானல் நான் சிறுத்தை போல் பாய்ந்து அவர்களைக் கீறிவிடுவேன்.

ஜக:—நான் இப்போது போய் மதபோதகரை அழைத்து வந்து உனக்கு நல்லுபதேசங்களைச் செய்து உன் மன தில் அமைதியை ஏற்படுத்துவது நல்லதல்லவா?

அப்போது இராஜம்மாள், "கூடாது. அவர் வேண்டாம். அவரால் எனக்கு ஒன்றும் நன்மை ஏற்படாது" என்று கூறிக்கொண்டே பைத்தியம் பிடித்தவள்போல் எதிரில் இருக்கிற ஜகதீசனையும் லட்சியம் செய்யாமல் ஏதேதோ உளறலானள். அப்போது அவள் பின்வருமாறு கூறினாள்:—

"பல வருஷங்களுக்குமுன் புஷ்பங்களும் பழங்களும் நிரம்பிய ஒரு தோட்டத்தில் ஒரு அழகிய சிறுமி மேலும் கீழுமாக உலாவிக்கொண்டிருந்தாள். அப்போது அப்பெண் ணுக்கு வயது ஐந்து அல்லது ஆறுவருஷம்தான் இருக்கும். ஆ! என்ன அழகுடையவளாயிருந்தாள். அவள் கன்னங்கள் செக்கச்செவேலென்று இருந்தன. அவளது முகத்தில் ஒளி பிரகாசித்தது. கண்களில் ஆனந்தம் தாண்டவமாடியது. அவ ளது கரிய அடர்ந்த கூந்தல் அவளுடைய அழகிய தோள் களின்மீது பரவியிருந்தது. அவளுடைய செவ்விதழ்போன்ற

உதடுகளின் மத்தியில் புன்சிரிப்பு தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது. அவளுடைய அழகிய கால்கள் அத்தோட்டத்தின் செப்பனிடப்பட்ட ரஸ்தாவில் மேலும் கீழுமாக நடமாடிக்கொண்டிருந்தன. அக்குழந்தை அதனிடம் அதிக பற்றும் ஆவலும்கொண்ட ஒரு தாயினுடையது. அந்தத்தாய் ஒரு விதவையாக இருந்தாள். ஆகவே அந்தக் குழந்தைதான் அத்தாயின் பொக்கிஷமாகவும் உடைமையாகவும் இருந்தது. அத்தோட்டத்தைச் சேர்ந்த வீட்டினின்றும் வெளியில் வந்த தாயைக்கண்ட அக்குழந்தை, பசுவைக்கண்ட கன்றுபோல், எவ்வளவு ஆர்வத்துடன் தன் தாயினிடம்தாவிச் சென்றிருக்கும் என்று நினைக்கிறாய்? ஒரு புஷ்பத்திலிருந்து இன்னொரு புஷ்பத்துக்குத் தாவிக்கொண்டிருந்த வண்ணாத்திப்பூச்சியும், அப்போது அக்குழந்தை அடைந்த அவ்வளவு சந்தோஷத்தை அடைந்தே இராது. ஆ! அக்குழந்தைக்கு அப்போது எவ்வளவு சந்தோஷம்! சிறிதும் களங்கமற்ற வாழ்க்கையல்லவா? ஜகதீசா! இப்போது கூறியவிவரம் என் சிறு பிராயத்தில் எனக்கு நேர்ந்த அனுபவமாகும். அக்குழந்தை நானே.''

இவ்வாறு கூறும்போது அவள் துக்கத்துடன் தன் தலையை நிமிர்ந்து, ஜகதீசனைப் பார்த்தாள். அப்போது ஜகதீசனும் மிக்க அனுதாபமடைந்து இரக்கத்துடன் அவள் பரிதாப நிலைமைக்காகக் கண்ணீர்விட்டான். அவன் உண்மையில் அப்போது தன் மனக்கண்முன் வயது சென்ற மகா கொடியவளான துக்கத்துடன் கூடிய அம்மாதைப் பார்க்கவில்லை. அதுபோலவே பெரும் கற்பாறைகளால் எழுப்பப்பட்ட சுவர்களாலான சிறை அறையைப் பார்க்கவில்லை. ஆனால் அவள் வர்ணித்தபடி அழகிய நந்தவனம் போன்ற தோட்டத்தையும், அச்சிறுமியையும் கண்டான்.

இராஜம்மாள் மேலும் தன் பேச்சை ஆரம்பித்துப் பின் வருமாறு கூறினாள்:—“இப்போது நான் கூறும் காட்சி மாறு கிறது. நான் முன்பு சொன்னசம்பவம் நிகழ்ந்து பன்னிரண்டு வருஷங்களுக்குப்பின் சுமார் பதினேழு அல்லது பதினெட்டு வயதுடைய மங்கை ஒருத்தி அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த ஒரு அறையில் இருந்த சோபாவின்மீது சாய்ந்திருந்தாள். ஆ! அவள் கண்டோர் மனதைக்கவரும் வசீகரத் தோற்றமுள்ளவளாய் இருந்தாள். செல்வம், சந்தோஷம் முதலியவை நிரம்பியிருப்பதற்கு வேண்டிய சௌகரியங்களெல்லாம் அம்மங்கையின் மீதும் அவ்வறையிலும் காணப்பட்டன. அவளுடைய உடை நாகரிகமானதாயும் விலையுயர்ந்ததாயும் இருந்தது. அவளது கூந்தலில் வைர நகைகளும், கழுத்தில் முத்து நகைகளும், அவளது தேகத்தில் பொன் நகைகளும் பிரகாசித்துக்கொண்டிருந்தன.

அப்போது ஒரு ஆள் அவ்வறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளேசென்று எத்தனைமணிக்கு வண்டி வேண்டும் என்று கேட்டான். அதற்கேற்ற பதிலும் அவள் கொடுத்துவிட்டாள். பிறகு பற்பல நகைவியாபாரிகளும், ஆடை வியாபாரிகளும், மற்றும் பல வியாபாரிகளும் தங்கள் தங்கள் சரக்குகளை அம்மங்கையினிடம் காண்பித்து அவளிடம் ஆர்டர் பெறுவதற்காக அங்கே வந்து கூடினார்கள். பிறகு சித்திரம் வரைவதில் பெயர்போன ஒருவர் வந்து அவளுடைய உருவப்படத்தை எழுத அனுமதிகேட்டார். இவ்வாறாக அவள் பகற்பொழுதைக் கழித்தாள். பிறகு மாலையில் நல்ல யௌவனம் வாய்ந்த ஒரு இளைஞன் அங்கு வந்தான். அவன் இரத்தினபுரியில் செல்வாக்கும் ஆடம்பரமும் வாய்ந்த பிரபுக்களில் ஒருவன். அந்த மாது அவனுடைய மனமார்ந்த காதலி. அப்பிரபுவுக்கு அந்த அழகிய மங்கையினிடம் தணி

யாக்காதல். அவளுக்காக அவன் தன் உயிரைத் தியாகம் செய்யவும் தயாராக இருந்தான். ஆனால் அவன் முன்னமே கலியாணம் செய்துகொண்டு பெரிய குடும்பஸ்தனாக இருந்தான். ஆதலால் அவளை விவாகம் செய்துகொள்ள அவனால் முடியவில்லை. இருந்தாலும் அவன் தனக்கு அவளிடம் அளவு கடந்த காதல் இருக்கிறதென்பதை நிரூபித்துக் காட்டக்கூடிய வழியில் அன்புடனும் தாராளமாகவும் நடந்துகொண்டான். அவன் பெரிய பணக்காரனாய் இருந்தபடியால், தன்னால் காதலிக்கப்பட்ட அம்மாதுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துதர அவன் சிறிதும் பின்வாங்கவில்லை. அவன் தன் காதலியை மிகப் பிரம்மாண்டமான அழகிய ஒரு கட்டடத்தில் வசிக்கும்படி வைத்திருந்தான். அவளுக்கு வேண்டிய வண்டிகள் முதலிய போக்குவரத்து சாதனங்களையும், சேவகர்களையும், மற்றும் வேண்டிய எல்லாச் சௌகரியங்களையும் அளித்திருந்தான். சுருங்கச் சொல்ல வேண்டுமாயின் அவள் இந்திரலோகத்திலுள்ள மாதர்களைப்போல் இன்பமனுபவிக்க வேண்டுமாயினும் அதற்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தியிருந்தான். ஆனால் அம்மங்கை அப்பிரபுவை உண்மையாகக் காதலிக்கவில்லை. சிறிதும் அவனிடம் அவளுக்கு அபிமானமென்பதே கிடையாது. அவன் செல்வத்தையும் செல்வாக்கையும், அவன் அளித்த சௌகரியங்களையும் கண்டு அவன் தயவைப் பெறுவதற்காக அவனை நேசிப்பதுபோல் பாவனை காட்டினாளேயொழிய உண்மையில் அப்பிரபுவை அவள் விரும்பவே இல்லை. அம்மங்கை சிறுபிராயம் முதலே யாரேனும் ஒரு பிரபுவின் வைப்பாட்டியாக இருக்க விரும்பினாளேயொழிய ஒரு ஏழையின் மனைவியாய் இருக்க விரும்பவில்லை. அவள் இரத்தினபுரிக்கு வருவதற்கு முன்னர் அதையடுத்த ஒரு கிராமத்தில் எளிய வாழ்க்கையை அனுபவித்து வந்தாள்.

ஆனால் அப்பிரபு அவளிடம் பட்டணவாசத்தின் சிறப்பையும் சுகத்தையும் விளக்கிக்கூறித் தன்னுடன் வந்துவிட்டால் சகல சௌகரியங்களையும் அளிப்பதாக வாக்களித்தான். அவள் கிராமவாழ்க்கையை வெறுத்தவளாதலால் இரத்தினபுரியில் வசிக்க மிகவும் பிரியம் கொண்டிருந்தாள். ஆகவே அவள், அப்பிரபு இவ்வாறு கூறிய மாத்திரத்தில் அவனுடன் வந்து விட ஒப்புக்கொண்டு விட்டாள். அப்படியே அவனுடன் வந்துவிட்டாள். தன் எளிய வீட்டைவிட்டு வந்து பெரிய பிரபுவின் வைப்பாட்டியாக ஆரவாரம் மிக்க மாளிகையில் தங்கி யிருக்கிறாள். ஆனால் அவனை நேசிக்கவில்லை.

"இப்படி அவள் காலங்கழித்து வரும் நாளில் ஒருநாள் அவள் ஒரு வாலிபனைக்காண நேர்ந்தபோது அவளுக்கு அவனிடம் தணியாக் காதல் ஏற்பட்டுவிட்டது. ஆகவே அவள் அவனுடன் இரகசியமாகச் சம்பந்தம் வைத்துக் கொண்டாள். ஒருநாள் இதை அவளைக் காதலிக்கின்ற பிரபு அறிந்துவிட்டான். முன்பு அவன் எவ்வளவுதூரம் அவளைக் காதலித்தானோ அவ்வளவுதூரம் இப்போது வெறுத்துப் பழிவாங்க நிச்சயித்துவிட்டான். ஆகவே அவன் அவளுக்களித்திருந்த எல்லா வசதிகளையும் சௌகரியங்களையும் பிடுங்கிக்கொண்டுவிட்டான். அவனுடைய கோபத்தில் அவன் அவளுடைய தேகத்திலிருந்த நகைகளைப் பிடுங்கி பூமியில் போட்டு மிதித்தான். பிறகு அவளை அவ்வீட்டினின்றும் துரத்திவிட்டான். பாவம்! அவள் கதி என்ன? மாளிகையையும், நகைகளையும், சுகசௌகரியங்களையும் இழந்து வீடு இல்லாமலும் நண்பர்களில்லாமலும் அநாதையாய்த் தெருவில் திரியலானாள். மனமுடைந்துபோய்த் துயரத்துடன் தான் அன்புடன் நேசித்த அந்த வாலிபனைத் தேடிச்சென்றாள். ஏனெனின் அவனால்தானே அவளுக்கு அவ்வளவு கஷ்டங்கள் வந்தன. ஆனால் அந்த வாலிபன் அன்றுதான் கலி

யாணம் செய்துகொண்டு தன் புது மனைவியுடன் இன்பமனுப விக்கப் போய்விட்டிருந்தான். ஆகவே அந்தமங்கை என்ன செய்வாள் பாவம்! தெருவில் திண்டாடி என்னசெய்வ தென்று யோசித்துக் கடைசியாகத் தான் முன்பு துரோகம் செய்து விட்டுவிட்டுவந்த தன் தாயினிடம், கிராம வாழ்க் கையை நடத்தவே போய்விடுவதென்று நிச்சயித்தாள். ஆனால், தன் தாயாராகிய அவ்விதவை தன்னை மீண்டும் ஏற்றுக்கொள்வாளோ என்று சந்தேகித்தாள். ஆனால் பெற்ற தாயின் மனம் பித்தல்லவா? ஆகவே ஏற்பாள் என்பதிலும் சந்தேகமுண்டோ? உடனே வாடகைவண்டி பேசிக்கொண்டு தன் கிராமத்துக்குப் புறப்பட்டாள். தன் தாயைவிட்டு அக் கிராமத்தினின்றும் இரத்தினபுரிக்கு வந்தபோது பிரபுவின் சொந்த வண்டியில் அவனது தொடையின்மீது தலையை வைத்துப் படுத்துக்கொண்டு இன்பமாக வந்தாள். ஆனால் இரத்தினபுரியினின்றும் கிராமத்துக்குப் போகும்போதோ தன்னந்தனியளாய் வாடகை வண்டியில் துயரத்துடன் போனாள். கிராமத்தில் தன் வீட்டுக்கருகில் ரஸ்தாவில் வண்டியை விட்டு இறங்கிவிட்டாள். அப்போது இருட் டாக இருந்தது. அவள் இறங்கிய இடத்திலிருந்து வீட்டுக் குச் செல்ல ஒருமைல் நடக்கவேண்டியிருந்தது. இருட்டாக இருந்தபடியாலும், ரஸ்தாவின் இருபுறங்களிலும் மரங்கள் அடர்ந்திருந்தபடியாலும் அவள் அச்சத்துடன் நடந்துசென் றாள். ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும் அவள் ஹிருதயம் திடுதிடுத்தது. எப்படியோ மெதுவாக நடந்து வீட்டை யடைந்தாள். அங்கு ஒரு அறையில் சிறு விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. அதுதான் அம்மங்கை யின் தாயாரின் அறை. ஓ! ஒருகால் தாயார் அசௌக்கிய மாய் இருக்கிறாளோ, அப்படியிருந்தால் தன் கதி என்ன? என்று அவள் நினைத்தாள். எப்படியும் அவள் தோட்டக்

கதவைத் திறந்துகொண்டு அவமானத்துடனும் துயரத்துடனும் அவ்வீட்டின் முன்வாயிலில் சென்று கதவைத்தட்டினாள். உடனே ஒரு வயோதிகமாது அக்கதவைத் திறந்தாள். அவள் பல வருஷங்களாக அவ்வீட்டில் வேலைக்கு இருப்பவள். அவள் கதவைத்திறந்ததும் தன் எதிரில் நிற்கும் அம்மங்கையைக் கண்டு திக்பிரமை யடைந்தாள். எனினும் அம்மங்கை உடனே உள்ளே புகுந்து அவ்வீட்டின் மாடிமீது ஏறித் தன்தாயின் அறைக்குள் சென்றுபார்த்தாள். ஐயோ என்செய்வாள் பாவம்! தன்தாய் படுக்கையில் கிடக்கிறாள். அங்கே உள்ள இரண்டொருவேலைக்காரிகள் அம்மாதுக்குச் சிஷ்ருஷை செய்துவருகிறார்களென்றாலும் அவள் மனமுடைந்து அதனால் நோயுற்று அது அதிகரித்து அப்போது தான் இறந்து பிரேதமாகக் கிடக்கிறாள். அதை அம்மங்கை தவிர வேறுயாரும் அறியவில்லை. உடனே அப்பெண் துயரமும் துக்கமும் பொறுக்கமுடியாமல் ஓவென்று வாய்விட்டு அலறினாள். அவள் கத்திய சத்தமானது வெகுதூரம் கேட்டது. எல்லாரும் இதென்னவென்று பயந்தார்கள். அவள் மயக்கத்துடன் அப்படியே கீழே விழுந்தாள்.''

என்று இவ்வாறு கூறியதும் இராஜம்மாள் மறுபடியும் சிறிதுநேரம் மௌனமாக இருந்து தன் கரங்களால் தன் முகத்தை மூடிக்கொண்டு பெருமூச்சுவிட்டு அழுதாள். அவள் தன் வாழ்க்கையில் ஏற்பட்ட இரண்டாவது நிலைமையை விவரித்தாள் அல்லவா? அதுவும் துக்கமயமான விஷயம். இதையெல்லாம் அவள் ஜகதீசனிடம் சொல்லிக்கொள்ள வேண்டுமென்று விரும்பவில்லை யென்றாலும் தன் மனம் குழம்பி இருக்கும் அவ்வேளையில் தனக்கும் தெரியாமல் ஏதேதோ உளறியதில் அதையெல்லாம் கூறிவிட்டாள். ஆனால் ஜகதீசன் மட்டும் அதை அனுதாபத்துடனும் துக்கத்துடனும் கேட்டான். ஏனெனின் இப்படிப்பட்ட

சம்பவங்களைக்கண்டு யார்தான் துக்கப்படமாட்டார்கள்? ஆகவே அவன் கண்களினின்றும் கண்ணீர் முத்து முத்தாக வெளியாய்க்கொண் டிருந்தது. மனம் அனுதாபத்தால் நிரம்பி யிருந்தது.

பிறகு சொற்பநேரத்துக்கெல்லாம் இராஜம்மாள் சற்று நிதானித்துக்கொண்டு மீண்டும் அச்சரித்திரம் சொல்லத் தொடங்கிப் பின் வருமாறு கூறலானுள்:—"பிறகு பல வருஷங்கள் கழிந்து விட்டன. அந்தக்காலத்தில் எவ்வளவோ சம்பவங்கள் துக்கமானதும், பயங்கரமானதும் நடைபெற்றன. அம்மங்கையின் தாய் இறந்துபோனதால் அப்பிரேதம் தக்க இடத்தில் புதைக்கப்பட்டது. பிறகு அப்பெண் அடிக்கடி சென்று பிரேதம் புதைத்த இடத்தைப் பார்த்து வந்தாள். அவள் தன் வீட்டு அறையில் தனியாகப் படுக்கும் போதெல்லாம் தன் தாயின் ஞாபகம் வரும். அப்போது அவள் பயமும் துக்கமும் அடைவாள். இப்படிப்பட்ட பயத்தையும் துக்கத்தையும் மறைப்பதற்காகவே அவள் தன் இஷ்டப்படி பல கனவான்களுக்கும் வைப்பாட்டியாக இருந்தாள். இன்று ஒருவருக்கு வைப்பாட்டியாக இருப்பாள். நாளை அவருடன் சண்டை போட்டுவிட்டு வேறொருவரின் வைப்பாட்டியாக இருப்பாள். இதனுல் பல ஆடவர்களின் விரோதத்துக்கும் காலித்தனங்களுக்கும் ஆளாவாள். அப்போது வேறொருவர் அவளைக் காப்பாற்றுவார். சில சமயங்களில் செல்வர்களின் கூட்டுறவால் சுகப்படுவாள். மற்றும் சில சமயங்களில் காலிகளின் கூட்டுறவால் மிக்க ஏழ்மைத் தனத்தையும் வருத்தத்தையும் அடைவாள். சில சமயங்களில் பல விருந்தினர்களுடன் ஆடம்பரமாகச் சாப்பிடுவாள். வேறு சில சமயங்களில் ஒரு கவளம் அன்னத்துக்காகத் தன் ஆடைகளையும் அடமானம் வைக்கவேண்டிய

நிலைமையில் இருப்பாள். இவ்வாறு அவள் காலந்தள்ளி வருகையில் சொற்ப நல்ல நிலைமையில் இருக்கும்போது அவளைக் கூடியவரை பணக்காரனும் செல்வாக்குள்ளவனும் இருந்த ராஜன் என்பவன் அவளிடம் காதல்கொண்டு தன் மனைவியாக வைத்துக்கொண்டான். அவர்களிருவரும் பரஸ்பரம் காதலித்துக் கலியாணமும் செய்து கொண்டார்கள். நான்கு, ஐந்து வருஷங்கள் கழிந்தன. அதற்கிடையில் அவள் இதர ஆடவர்களைச் சேர்க்காமல் ஜாக்கிரதையாக இருந்தாள். ஏனெனின் அதனாலேற்படக்கூடிய துன்பங்களை அனுபவிக்க அவள் விரும்பவில்லை. எனினும் ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அவள் புத்தி ஸ்திரமாக இருக்கவில்லை. ஏனெனின் அப்போதும் அவள் நல்ல யௌவன முடையவளாகத்தான் இருந்தாள். அவள் தற்செயலாகச் சந்தித்த ஒரு வாலிபனிடம் மீண்டும் மோகங்கொண்டாள். அவனும் அவளுக்கு ஏதேதோ சொல்லி மயக்கி விட்டான். சொற்பகாலம்வரை கணவனுக்கும் தெரியாமல் அவனுடன் ரகசியமாகச் சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்தாள். ஆனால் சிலகாலத்துக்குப் பின்னர் கணவனுக்குச் சந்தேகம் அதிகரித்து அவன் அவளுடைய பழைய சரித்திரத்தை விசாரித்தபோது விபசாரத்தில் இறங்கிப் பலருக்கும் தன் மானத்தை விற்ற ஒருத்தியைத் தான் விவாகம் செய்துகொண்டதற்காக மிகவும் வருந்தினான். அவள் முதலில் ஒரு பிரபுவைத் தொடர்ந்து சென்றதால் மனமுடைந்து அவள் தாய் இறந்துபோனதும், பிறகு பல கனவான்களுக்கு அவள் வைப்பாட்டியாக இருந்ததும், மற்றும் பல விவரங்களும் அவனுக்குத் தெரிந்துவிட்டது. அப்படிப்பட்ட ஒருத்தியைக் கூடியவரை செல்வமும் செல்வாக்கும் கௌரவமும் உடைய அவன் மனைவியாகக்கொண்டு அவளைத் தன் குடும்பத்துக்கே தலைவியாக்கியதற்காக மிகவும் வருந்தினான். ஆகவே அவனும் அவளைத் தன் வீட்டினின்

ரும் துரத்திவிட்டான். காலணுவும் கையில் கொடுக்கவில்லை. தான் கொடுத்த ஆடை ஆபரணங்களையும் பிடுங்கிக்கொண்டான். பாவம் அப்பெண் மீண்டும் அநாதையாகித் தெருவில் நின்றாள். சொற்பகாலத்துக்குள், அவளை விவாகம் செய்துகொண்ட அந்த ராஜன் என்னும் கனவான் மனமுடைந்து இறந்துவிட்டான். அவளுக்கென காலணுவும் சொத்து வைக்கவில்லை. ஆ! அவளுடைய கதி என்ன?"

இவ்வாறு கூறியபோது, தூக்கிலிடப்படவேண்டிய இராஜம்மாள் மீண்டும் சிறிதுநேரம் மௌனமாக இருந்து துக்கமேலீட்டால் கண்களில் நீர்ததும்ப பைத்தியக்காரியைப்போல் நாற்புறங்களிலும் பார்த்துத் தலையை அசைத்துக்கொண்டும், கையைப் பிசைந்துகொண்டும் துக்கத்துடன் நின்றாள். இம்முறையும் ஜகதீசன் அவளிடம் அனுதாபம் கொண்டு அழுதான். இம்முறை அவன் தன் மனக்கண் முன், அழகிய நந்தவனத்தில் ரூபலாவண்யமுடைய சிறுமியையோ அல்லது காதலனால் துரத்தப்பட்டு மீண்டும் தன் தாயினிடம் சென்ற மாதையோ அவன் காணவில்லை. ஆனால் முன்னால் ஏற்பட்ட கஷ்டங்களால் ஒரு சிறிதும் படிப்பினை பெறாமல் விபசாரத்தில் இறங்கி மானங்கெட்டு பிறருடைய அனுதாபத்தைப் பெறவும் யோக்கியதை இல்லாதபடி பல ஆடவர்களுக்கும் துரோகம்செய்து, கடைசியில் அவளை நம்பி விவாகம் செய்துகொண்ட கனவானுக்கும் மோசம் செய்து அதனால் அநாதையாய்ப்போன மாது தன் மனக்கண்முன் நிற்பதுபோல் கண்டான். ஆகவே அவளைத் துயரத்துடன் உற்று நோக்கினன்.

அவள் அவனைச் சற்றும் பொருட்படுத்தாமல் மீண்டும் தன் விவரத்தைக்கூற ஆரம்பித்துப் பின் வருமாறு கூறலாயினள்:—"இராஜன் என்னும் கனவான் இறந்து பல வருஷங்க

ளாய்விட்டன. அம்மாதும் கேட்பாரில்லாமலும், தக்க திக்கு இல்லாமலும் பற்பலவிதமான தீய நடத்தைகளிலும் வழிகளிலும் தன் வாழ்க்கையை நடத்தலானாள். அவள் யௌவனம் வாய்ந்தவளாயும் அழகானவளாயும் இருந்ததால் தன் இஷ்டப்படி நடப்பதில் அவளுக்குப் பல ஆடவர்களான காமுகர்களும் உதவி செய்தார்கள். இதனால் நாளுக்கு நாள் அவளுடைய நிலைமை மிகக் கேவலமானதாகப் போய்விட்டது. அவள் எல்லா விபசார விடுதிகளிலும் சொற்ப காலம் தங்கி இருந்தாள். அவளைப் பயன்படுத்திக் கொள்ளாத விபசார விடுதியே இல்லையென்றும் கூறிவிடலாம் அவள் அவ்வாறு மிதமிஞ்சி ஆண்பெண் கூட்டுறவில் ஈடுபட்டதால் நியாயமான கால அளவுக்கு முன்னரே அவள் கிழவியாய்விட்டாள். அவளுக்கு வயோதிகம் வாய்த்திடவே. அவளைக்கண்டு காமுற்றவர்களெல்லாம் அவளை வெறுக்கத் தொடங்கினார்கள். அவளை அனைவரும் நேசிப்பதற்குப் பதிலாக அருவருக்கலாயினர். அவளுடைய அழகுகளெல்லாம் ஒவ்வொன்றாக மறையலாயின. ஆகவே ஒருகாலத்தில் மிக்க அழகுள்ளவளாயும், கண்டோர் மனதைக் கவரக்கூடியவளாயுமிருந்த அவள் இன்று கேவலம் எல்லாரும் வெறுக்கக்கூடிய முறையில் பொக்கைவாயுடனும் எலும்புக்கூடுடனும் காணப்படுகின்றாள். அவளுடைய சந்தோஷமும் தீய எண்ணங்களும் மறைந்துவிட்டன. ஆகவே அவள் வயிற்றுப் பிழைப்புக்காக ஏதேனும் தொழிலில் இறங்கவேண்டியதாயிற்று. அவள் ஆதிமுதலே தீயகாரியங்களில் இறங்கி அவள் இயற்கைச் சுபாவமே விபசாரமாகப் போய்விட்டதால் இறுதிவரை அத்துறையிலேயே காலங்கழிக்க வேண்டியதாயிற்று. அவள் பால்யத்தில் பல விபசாரவிடுதிகளில் தங்கிக் காலங்கழித்ததே போல் தன் வயோதிகத்தில் பல சிறுமியரை அவள் தந்திரத்தினாலும் சூழ்ச்சியினாலும் விபசாரத்துக்குட்படுத்தி அதை

யொரு ஜீவனமாகக்கொண்டாள். ஆ! தான் ஒரு கௌரவ மான குடும்பத்தைச் சேர்ந்த விதவையென அவள் கூறிக் கொண்டு தான் இருந்த ஒரு வீட்டில் எத்தனை பெண்களை அவள் கெடுத்தாள் என்றால் அது சொல்லமுடியாது. அவ ளுடைய சூழ்ச்சிக்குட்பட்டுக் கெட்டுப்போன, பின் அனாதை யாய்த் திரிந்த பெண்களும், இத்தகைய விபசாரத்தால் ஓட் டாண்டிகளாய்விட்ட ஆடவர்களும், மற்றும் விபசார வாழ்க் கையில் ஈடுபட்டதன் பயனாக விரைவில் எமனுலகம் அடைந்த ஆடவரும் மாதரும் இப்போது அவளுக்கு விரோதமாகச் சாட்சிசொல்ல முன்வருவதென்றால், அதைப்பற்றி என் னென்பேன்! அவளுடைய பாவ சரிதைமட்டும் ஒரு பெரிய புராணமாக முடியும். அப்படிப்பட்ட ஒரு பாபகாரியத்தில் ஈடுபட்ட அவளுக்கு விமோசனம் எங்கிருந்து கிடக்கும். இவ் வளவு தீயகாரியங்களில் இறங்கிய ஒருத்தி இறக்கும் போது அமைதியான மனத்துடனும், சௌரவமாகவும் இறக்கவேண்டுமென்றால் அதுமுடியுமா? இல்லை. இல்லை. அது முடியவேமுடியாது. ஆதலின் இவ்வளவு கஷ்டங்களை யும், அவமானத்தையும், துயரங்களையும் அனுபவிக்க நான் கடமைப்பட் டிருக்கிறேன். என்போன்ற மகா கொடிய பாவிக்கு இது அவசியமானதே. ஆ! எமன் வந்துகொண் டிருக்கிறான். சமீபித்துவிட்டான்; மிகக் கடுமையாக வரு கிறான். அவன் தன் கொடுமையையெல்லாம் திரட்டி என் மீது பிரயோகிக்கின்றான்."

இவ்வாறு இராஜம்மாள் கூறிக்கொண்டே தன் இடத்தி னின்றும் எழுந்து நின்று ஒருபக்கமாகச் சென்று அப்பக்கம் தன் கையை நீட்டியதுடன் உற்றுப்பார்த்தாள். அங்கே ஏதோ பயங்கர வஸ்து காணப்படுவதுபோல் அஞ்சினாள். ஜகதீசனும் பச்சாதாபத்தால் திடீரென்று எழுந்து அவள் ஏன் அப்படி அஞ்சுகிறாள் என்று கவனித்தான். அவளது

மனோநிலைமைக்காக மிகவும் இரங்கினான். அவள் சரித்திரத்தையெல்லாம் அவளது வாயினாலேயே கேட்ட அவன் அவளை ஒரு பெண்பேய் என்று நினைத்தானே யொழிய மானிட ஜன்மம் தாங்கியமாது என்று கருதவேயில்லை. எனினும் பாவம்! எப்படியோ அவள் வாழ்க்கை வாலிபம்முதலே இவ்வாறு தவறான வழியில் சென்றுவிட்டதே என்று மிகவும் வருத்தப்பட்டான். இதனால்தான் அவனுக்கு அவளிடம் அனுதாபம் ஏற்பட்டது.

அப்போது இராஜம்மாள் மீண்டும் பேச ஆரம்பித்து, "ஆ! என்கதி இப்படியாய்விடும் என்பது இப்போது தெரிந்துவிட்டது. தூக்குமேடை எனக்காகத் தயாராய்விட்டது. ஆனால் நீ யார்? ஆ! எனக்கு ஞாபகம் வருகிறது. நான் மனக்குழப்பத்தால் ஏதேதோ உளறிக்கொண்டிருக்கிறேன். ஜகதீசா! நீ சில பயங்கரமான விஷயங்களையெல்லாம் இப்போது என் வாயால் வந்ததைக் கேட்டாய் அல்லவா? ஆகவே எனக்கேற்பட்டுள்ள தண்டனையும், இப்போது நான் படும் துயரமும் சரியானதுதான் என்று நீ நினைக்கிறாய் அல்லவா? பரிதிபுரத்துக்கடுத்த மாளிகையில் இளவரசி வசித்து வந்ததில் அன்றிரவு 'கொலை, கொலை' என்ற சத்தம்கிளம்பியதும் நீயும் பலராமனும் என் அறைக்குவந்து என்னைப் பிடித்துக்கொண்டதுமுதல் இன்றுவரை நான் அனுபவிக்கும் பல துயரங்களையும் நீயே சிந்தித்துப்பார்" என்று பணிவுடன் கேட்டாள்.

அப்போது நமது ஜகதீசன் மெதுவாகவும் இரக்கத்துடனும், "இராஜம்மாளே! இப்போது நான் சொன்ன வார்த்தைகளையே மீண்டும் திருப்பிச்சொல்லக்கூடும். இனி இவ்வுலக வாழ்க்கையைப்பற்றி நீ கவலைப்படுவதில் ஏதும் பயனில்லை. உன் பழைய நடவடிக்கைகளையெல்லாம் இப்போது நீயே தெரியப்படுத்தினாய். இவ்வாறு பழைய விருத்தாந்தங்களைக்

கூறிக்கொண்டதால் நீயே. ஆறுதல் அடைந்திருப்பாய் என நினைக்கிறேன். ஆகவே நீ இறுதியாக மன அமைதியுடன் கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டே யிருந்து உயிரை விடுவது தான் நலம் என்று தெரிவிக்கிறேன்'' என்று கூறினன்.

உடனே இராஜம்மாள் துக்கத்துடன், "என்ன? என் நம்பிக்கைகளையெல்லாம இழந்து விடும்படி கூறுகிருயா? இல்லை, இல்லை. அது முடியவேமுடியாது. இவ்வாறு கொடுமையாக இறந்துவிட நான் சம்மதிக்கமாட்டேன். நீதான் என்னைக் காப்பாற்றவேண்டும். நீதான் என்னை இக்கஷ்டத்தினின்றும் விடுவிக்கவேண்டும்,'' என்று கூவினள்.

அப்போதும் ஜகதீசன் மெதுவாய்த் தலையை அசைத்துக்கொண்டே, "கடைசி முறையாக நான் சொல்லுகிறேன். நீ நம்பிக்கைகளை இழந்து மரணத்துக்குத் தயாராகவேண்டியதுதான். உனக்கு வந்தனம். நான் போகிறேன்'' என்று கூறிக்கொண்டே அவன் எழுந்தான்.

உடனே அவள், "அப்பா! ஒரு நிமிஷம் இரு. உன்னிடம் சில கேள்விகள்கேட்க நான் விரும்புகிறேன். இன்னும் இரண்டொரு நிமிஷங்கள் மட்டுமாவது இரு. நானும் பொறுமையுடன் இருக்கிறேன்'' என்று கூறிக்கொண்டே அடக்கமுடியாத அச்சத்தாலும் துயரத்தாலும் நடுங்கினள். அதற்கு ஜகதீசன், "அப்படியானல் உடனே கூறவேண்டியதைக்கூறு. நான் விரைவில் வெளியே போகவேண்டும் இங்கு மதபோதகர் வரவேண்டியதாயிருக்கிறது'' என்ருன்.

அதற்கு இராஜம்மாள் மெய்நடுங்க வாய்குழற, "ஜகதீசா! உண்மையில் சொல். இப்போது வெளியில் எல்லாரும் என்னைப்பற்றிக் கேவலமாகவும், அற்பமாகவும் மற்றும் பலவிதமாகவும் பேசிக்கொண்டிருக்கிருர்களல்லவா? நாளை காலை இவ்விடம் பெருங்கூட்டங் கூடிவிடுமன்ருே? என்னை

இங்கிருந்து தூக்குமேடைக்கு அழைத்துப் போவதற்குள் வழியில் எனக்குப் பல அவமானங்களும் சங்கடங்களும் விளையுமல்லவா?" என்று கேட்டாள்.

ஜக:—அப்படி யொன்றும் நேருமென்று நான் நினைக்க வில்லை. நீ எதற்கும் பயப்படவேண்டிய அவசியமில்லை யென்றே நினைக்கிறேன். உனக்கு ஏதும் அவமானமோ கஷ்டமோ வராமற்படி போலீசார் பாதுகாப்பார்கள்.

இராஜம்மாள்:—ஐயோ கடவுளே! அந்த மூன்று மனிதர்களும் நாளையதினம் தூக்குமேடையில் இறக்கவேண்டியதுதானா? அல்லது அவர்களுக்கேனும் ஏதேனும் தப்ப வழியுண்டா?

ஜகதீ:—நான் அப்படி ஒன்றும் நினைக்கவில்லை. அவர்கள் தப்ப முடியாது. அவர்களும் உன்கதியை அடைய வேண்டியதுதான்.

இராஜம்:—சரி. டாக்டர் மணவாளனுடைய கதி என்ன ஆயிற்று? அவனுக்கு எப்படிப்பட்ட தண்டனை விதிக்கப்பட்டது?

ஜகதீ:—டாக்டர் மணவாளன் பரிதிபுர ராஜ்யத்தினின்றும் நாடு கடத்தப்பட்டான். அவன் திருட்டுப் பிரசவத்திற்கு உதவிசெய்தான் என்பதைத்தவிர வேறு ஒரு குற்றமும் அவன் செய்ததாகத் தெரியவில்லை. மேலும் அவன் உள்ள விஷயங்களை என்னிடம் ஒளிமறைவின்றிக்கூறி யோக்கியதையாக நடந்து கொள்வதாய் இருந்தால் அவன் தப்பித்துச்செல்ல உதவி புரிவதாக வாக்களித்திருந்தேன். அவ்வாறே அவனுக்காக நீதிபதிகளிடம் பரிந்து பேசி அவனுக்கு அந்த உபாயதண்டனையை வாங்கிக் கொடுத்தேன்.

இராஜம்:—அதேமாதிரி நீ இப்போதேனும் எனக்காகவும் நீதிபதிகளிடம் பரிந்துபேசி என்னை மரணதண்டனையி னின்றும் தப்புவித்துவிடலாகாதா? இவ்வளவு நியா யம் கிடைக்காதா? நான் தூக்குமேடையில்தான் சாக வேண்டும் என்பது உன் விருப்பமா? என் இரத்தத்தை வாங்குவதில் உனக்குப் பிரியம் அதிகமா?

ஜகதீ:—அம்மா! அப்படியெல்லாம் சொல்லாதே. இறை வன் அருளால் நான் அவ்வளவு கொடுமையானவனாக இல்லை. ஆயினும் உன் விஷயத்தில் என்னால் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. என்னால் முடியக்கூடிய காரி யம் ஏதேனும் இருந்தால் நான் கட்டாயம் உன் மரண தண்டனையைமாற்றி ஆயுள்பரியந்தம் சிறையிலிருக்கும் படி செய்வேன். ஆனால் என் கையாலாவது ஏதுமில்லை. மரணதண்டனையையே நான் எக்காலத்தும் விரும்பு கிறவனல்ல. ஆதலால் நீ இறக்கும்போது என்னைப் பற்றி இப்படிப்பட்ட தவறான எண்ணங்களையெல்லாம் வைத்துக்கொண் டிருக்கவேண்டாம்.

இராஜம் "அப்படியானால் என் தண்டனையைமாற்றக் கடவுள் சாட்சியாக ஏதேனும்செய். என்னைக் காப்பாற்ற நீ ஏதேனும் முயற்சிசெய்ய வேண்டுமென்றே கேட்டுக் கொள்கிறேன்" என்று கூறிக்கொண்டே அவன் காலில் விழுந்தாள்.

ஜகதீ:—இராஜம்மாளே! எழுந்திரு. நான் மனிதரும் என் காலில் விழுவதை நான் சகிக்கமாட்டேன். நான் அரசனாக இருந்தபோதிலும் இவ்வாறு ஒருவர் என் காலில் விழுவதை நான் சம்மதியேன். ஆகவே நான் இதரவிஷயங்களைப் பேசுவதற்குமுன் நீ எழுந்திரு.

இராஜம்:—நான் உன் வார்த்தைக்கு கட்டுப்பட வேண்டுமென்பதற்காகவே இதோ எழுந்திருக்கிறேன். நீ சொல்லப்போவதைச்சொல்.

ஜகதீ:—இராஜம்மா! நான் சத்தியமாகக் கூறுகிறேன். உன் விஷயத்தில் கருணை காட்டவேண்டுமென்று நான் சிறை நிர்வாக சபையினரைக்கேட்டேன். உன்னால் பல துன்பங்களை யடைந்த இளவரசியும், நீ கொல்ல முயன்ற பலராமனும் நீ தூக்கிவிடப்படுதை விரும்பவில்லை. ஆகவே அதையும் அந்த அதிகாரிகளிடம் அறிவித்தேன்.

இராஜம்:—அவ்வளவு தெரிவித்தும் முடிவு என்ன ஆயிற்று?

ஜகதீ:—என்னசெய்தும் பிரயோசனமில்லாமல் போய்விட்டது. நம்பிக்கை இழக்கவேண்டியதாயிற்று. சட்டப்படி காரியங்கள் நடக்கவேண்டியதுதான்.

இதைக் கேட்டமாத்திரத்தில் இராஜம்மாள் மிக்க துக்கத்துடன் தன் படுக்கையில் சாய்ந்தாள். அவள் தன் நம்பிக்கைகளையெல்லாம் இழந்து விட்டாள். ஆகவே ஒரு வார்த்தையையேனும் வாய்திறந்துபேச அவளால் முடியவில்லை. மரணமே வந்துவிட்டதுபோல் கருதினாள். எனினும் சொற்பநேரத்துக்குப்பின் அவள் ஒருவாறு தன்னைத் தேற்றிக்கொண்டு, "இவ்வாறு என்னிடம் சிறிதும் இரக்கம் காட்டாமல் இப்படி என்னைக் கடைசிவரை ஒரேவிதமான தண்டனை ஏற்படுமென்று நான் கருதவில்லை" என்றாள். பிறகு அவள் சிறிதுநேரம் மௌனமாக இருந்து தன் ஆத்மாவுடன் ஏதோ பேசுவதுபோல் காணப்பட்டது.

ஜகதீசன் அவ்வறையினின்றும் வெளியே போய்விடவே மிகவும் ஆவலுடையவனாக இருந்தான். அங்கு

இராஜம்மாளின் பரிதாபகரமான காட்சியைப்பார்க்க அவனால் முடியவில்லை. அவன் அவ்வறையில் நுழைந்து இரண்டு மணி நேரத்துக்குமேல் ஆய்விட்டதென்பதையும் அவன் உணர்ந்தான். ஆனால் தன் கடிகாரத்தைப் பார்க்கவில்லை. ஏனென்றால் மணியைப்பார்த்தால் காலங்கடக்கிறது என்று கருதி இராஜம்மாளுக்கும் குறிப்பு காட்டியதுபோலாகுமே என்று கருதினான். ஆனால் உண்மையிலேயே மிகத் துயரத்திலாழ்ந்திருக்கும் அம்மாதினிடம் அவனுக்கு அனுதாபம் ஏற்பட்டது. ஆகவே அவள் ஏதோ அமைதியாக யோசித்துக்கொண்டிருக்கையில் தான் வெளியேபோய் அதனால் அவளது அமைதியைக் கலைத்துவிடக் கூடாதென்னும் எண்ணத்துடன் அங்கேயே உட்கார்ந்திருந்தான்.

சிறிது நேரத்துக்குப் பிறகு இராஜம்மாள் வாய்திறந்து பேச ஆரம்பித்து, "சரி! இப்போது நான் என் நம்பிக்கைகளையெல்லாம் இழந்து விட்டேன். எனினும் இரங்கம்மாள், ஜானகி ஆகியவர்களின் கதி யாதாயிற்று. பாவம்! அம்புஜம் தான் இறந்து விட்டாள். அவளைக் கொலைசெய்ய வேண்டுமென்பது என்னுடைய நோக்கமல்ல. நான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்து விட்டது" என்று கேட்டாள்.

அதற்கு ஜகதீசன், "ஆ! அந்த மூன்று சகோதரிகளா! அவர்களுடைய ஆபாச வாழ்க்கையினாலும், அவர்கள் அதற்கேற்றபடி அடைந்த தண்டனையாலும் உலக மக்களுக்கு ஓர் பெரிய படிப்பினையாக இருக்கிறது. உனக்குத் தெரிந்தபடி அம்மூவரில் ஒருத்தி முன்னமே அகாலமரணத்தையடைந்தாள். மற்றும் இருசகோதரிகளோ..." என்று கூறினான். இதற்குள் அவள் அவசரமாக, "ஐயோ! என்ன ஆயிற்று. அவர்கள்கதி எவ்வாறு முடிந்தது?" எல்லாவற்றை

யும் விவரமாகச் சொல். அவர்கள் சங்கதியும் எனக்குத் தெரிந்துவிட்டால் என் மனம் நிம்மதியாய்விடும்'' என்று அவனுடன் கேட்டாள்.

அப்போது ஜகதீசன், “ஆம், நீ கூறியபடியே உன் மனம் அமைதியை யடையும்பொருட்டு நீ கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுகிறேன். இரங்கம்மாளும், ஜானகியும் பூரண பைத்தியக்காரர்களாய்விட்டதால் இப்போது அவர்கள் பைத்தியக்கார விடுதியில் போடப்பட்டிருக்கிறார்கள்'' என்றான். அதற்கு இராஜம்மாள், “ஐயோ கடவுளே! பரிதாபமான விஷயம்தான். எனினும் பைத்தியக்கார விடுதியில் இருப்பது தூக்குமேடையில் ஏறுவதைவிட சிலாக்கியமானதே. ஜகதீசா! இப்போது என்மனம் நிம்மதி யடைந்துவிட்டது; நான் சாகத் தயாரானேன். ஆகவே போகலாம்'' என்றாள்.

ஜகதீசனும், “அம்மா! உனக்கு இறைவன் கிருபையும் சாந்தியும் கிடைப்பதாக'' என்று பிரார்த்தனை செலுத்திவிட்டு அவ்வறையைவிட்டுப் புறப்பட்டான். ஜகதீசன் அவ்வறையை விட்டு வெளியே சென்றதும், சொற்பநேரமாகவே வெளியில் தாழ்வாரத்தில் காத்துக்கொண்டிருந்த மதபோதகர் அவ்வறையில் புகுந்து சமயபோதனை புரியலானார். ஜகதீசன் அச்சிறையை விட்டு வெளியே வந்தபோது பொதுக் கடிகாரம் மணி பன்னிரண்டு அடித்ததைக் கேட்டான். பிறகு அவன் நேராகத் தான் இறங்கியிருந்த ராயல் ஓட்டலுக்குச் சென்று சேர்ந்தான்.

நேயர்காள்! நமது இராஜம்மாளின் சரித்திரத்தைக் கவனித்தீர்களா? அதிலிருந்து ஏற்படும் படிப்பினை என்ன? நாம் ஒரு விஷயத்தைப் படித்ததும் அதிலிருக்கும் படிப்பினையை அறிந்து நமது வாழ்க்கையைத் திருத்திக் கொள்

ளாமற் போவோமாயின் நாம் படிப்பதால் யாது பயன்! இராஜம்மாள் சிறு பெண் முதலே ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டு கட்டுப்பாட்டுக்குள் அடங்காததால்தான் அவள் இவ்வளவு பெரிய விபசாரியாக நேரிட்டது. மேலும் தேகக் கூறுபாட்டின் சாஸ்திரப்படியே என்ன தெரிகிறதென்றால் ஒருமாது ஒரே ஆடவனுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டும். இரண்டாவது ஆளின் சம்பந்தம் ஏற்பட்டு விடுமாயின் அதனால் உணர்ச்சி பாதிக்கப்பட்டு அது அடக்க முடியாமல் மேலும் மேலும் பல ஆடவர்களுடன் சேர வேண்டுமென்னும் தீய உணர்ச்சியையும், எண்ணத்தையும் உண்டாக்கிவிடும். இதே நியாயம் ஆடவர்களுக்கும் பொருந்தும். ஆதலினால்தான் நமது பெரியோர்கள் விவாகத்தை சம்ஸ்கார முறையென்றும் இவ்வுலகவாழ்வில் ஒரு மாதை ஒரு ஆடவனே மணந்துகொள்ள வேண்டுமென்றும், பிறகு அவர்களிருவரும் தனியாகவே காலத்தைக் கழிக்கவேண்டுமென்றும் முறையை ஏற்படுத்தினார்கள். அதையெல்லாம் நாம் இப்போது அலட்சியப் படுத்திவிட்டது "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்பதுபோல் கட்டுப்பாடற்ற வாழ்க்கையை நடத்த முயன்று வருவதும் நமது கெட்டகாலத்தின் அறிகுறியேயாகும். மேலும் பல பணக்காரர்களுக்கு வைப்பாட்டியாக இருந்து இன்பமனுபவிப்பது போல் சொற்பகாலம் அனுபவித்துப் பின்னர் அதற்கேற்ற படி மிகக்கடுமையான துயரத்தை அடைவதைவிட எளியவனாயினும் ஒருவனுக்கு உத்தமபத்தினியாக யிருந்து இம்மையிலும் மறுமையிலும் சாசுவதமானதும் நிரந்தரமானதுமான இன்பத்தை அடைவதே சிலாக்கியமாகும். மேலும் மாதர்கள் அழகையும் யௌவனத்தையும் கண்டு மோகித்து அவர்களைக் கெடுத்துவிடும் பல ஆடவர்கள் அம்மாதர் வயோதிகப் பருவத்தை யடைந்ததும் ஆடவர்கள் அவர்களை அலட்சியம்

செய்து விடுகின்றனர். நாட்டில் நடைபெறும் பெரும்பான்மையான கொலைகளுக்கு மாதர் சம்பந்தமான காம நாடகங்களே காரணமாகும் என்று பற்பல அனுபவம் வாய்ந்த நீதிபதிகளெல்லாம் கூறியிருக்கின்றனர். ஆகவே மாதர்கள் தினசரி வாழ்க்கையில் ஆடவர்களைப்போல் சம அந்தஸ்து பெற வேண்டுமென்னும் சீர்திருத்தம் அவசியமே யென்றாலும் ஆண்பெண் கூட்டுறவு சம்பந்தமான விவகாரங்களில் மட்டும் மிகக் கண்டிப்பான கட்டுப்பாடுகளுக் குட்பட்டே வாழ்க்கை நடத்தவேண்டும். இன்றேல் மானிட உலகமும் மிருக உலகமாகவே மாறிவிடுமென்பது நிச்சயம்.

186554
600 023

157 - வது அத்தியாயம்

ஜகதீசன் பரிதிபுரச்சிறையில் இராஜம்மாளைச் சந்தித்து விட்டுப்போன மறுநாள் காலை பதினொரு மணி இருக்கும். அன்று வெயில் அதிக கடுமையாகக் காயாமல் சொற்ப உஷ்ணத்துடன் காய்ந்தபடியால் தெருவில் சென்ற ஜனங்களுக்குக் கஷ்டம் தெரியவில்லை. நகரம் அன்று அதிகமான ஜனங்கள் தெருவில் நடமாடினர். கூட்டம் கூட்டமாகச் சிறையை நோக்கி வந்துகொண்டிருந்தனர். நகரில் அதிக பரபரப்பும் சந்தடியும் காணப்பட்டது. தூக்கு மேடைக்குமுன் இருந்த எல்லா வீடுகளின்மீதும், மரங்களின் மீதும், உப்பரிகைகளின்மீதும் ஆண்களும் பெண்களுமாக ஜனங்கள் திரள்திரளாகக் காணப்பட்டனர். அந்நகரத்தைச் சேர்ந்தவர்களும், அக்கம் பக்கம் கிராமவாசிகளுமான பல மாதர்களும், சிறுமிகளும் அழகாக அலங்கரித்துக்கொண்டு அங்கே கூடியிருந்தார்கள். சாதாரணமாக வாலிபர்களும், சிறு மங்கையரும் ஒன்றாகக் கூடுமிடங்களில் அவர்கள் அணி

வரும் பரஸ்பரம் காதல் லீலைகளில் ஈடுபடுவது வழக்கம். தேர் திருவிழாக்களிலும், சந்தைமுதலிய இடங்களிலும் அப்படிப் பட்ட சம்பவங்கள் தான் நிகழ்கின்றன. இதற்குக் காரணம் சமூக மக்களிடையே அரசாங்கத்தாரும், சமூகத்தலைவர்க ளாலும் ஒழுக்கம் தீவிரமாகப் போதிக்கப்படாமல் இருப்பது தான். ஆயினும் பரிதிபுரத்தில் கூடியிருந்த அந்த ஜனங்கள் மட்டும் தங்கள் முழுகவனத்தையும் சிறையில் சட்டப்படி நடக்கவேண்டிய ஒரு காரியத்தில் கண்ணுங் கருத்துமாயிருந் தார்கள்.

அந்த இடத்தில் பல இராணுவப்படைகள் வரிசை வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. ஆனால் பரிதிபுரம் சுய ஆட்சிபெற்ற குடியரசுவாய்ந்த ராஜ்யமாதலால் அந்நாட்டுமக் கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளுகிறோம் என்னும் உணர்ச்சி பெற்றிருந்தார்கள். ஆகவே அவர்கள் போலீஸ் இலாகாதார்களுக்கோ, இராணுவத்தாருக்கோ அதிக சிரமம் கொடுக்காமல் மிக்க ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் அமைதியாகவும் நடந்து கொண்டார்கள். எனினும் கூட்ட மாகக் கூடியிருந்த ஜனங்களை அப்புறப்படுத்தி ரஸ்தாவை ஒழுங்கு படுத்தவும், ஜனக்கூட்டத்தில் எத்தகைய கஷ்ட மும் எவருக்கும் நேரிடாமல் தடுக்கவும் சில போலீசாரும் ராணுவத்தாரும் அங்கே இருந்தார்கள். தூக்குமேடையில் தயாராய்விட்டது. ஜனங்களெல்லாம் தாங்கள் இறந்து போன ஒரு பிரேதத்தின் முன் நிற்பதுபோல எண்ணிப் பய பக்தி விசுவாசத்துடன் மரியாதையாக நின்றிருந்தார்கள். யாரேனும் ஒருவர் இருவர் தப்பித்தவறி ஏதேனும் சத்தம் செய்து விட்டாலும் உடனே அங்குள்ள பொறுப்புணர்ந்த ஜனங்களே எச்சரிக்கைசெய்து கூட்டத்தில் அமைதியை உண்டாக்குவார்கள். இவ்வாறு அக்கூட்டம் இருக்கும் நிலை

மையில் சிறையில் என்ன நடக்கிறதென்பதைக் கவனிப்போம்.

சிறையின் முன் இரண்டு குதிரைகளால் இழுக்கப்படும் பழைய கோச் ஒன்று நின்றிருந்தது. மணி பதினொன்று அடித்துச் சிறிது நேரத்துக்கெல்லாம் சிறைக்கதவு திறக்கப்பட்டது. உடனே சிறையிலிருந்து வெறியன், தொம்மன், தொப்பன் ஆகிய மூவரும் உறுவிய வாளுடன்கூடிய போலீசார் புடைசூழ வெளியில் வந்தார்கள். அவர்கள் மிகவும் சோர்ந்து போயிருந்தனர். அவர்கள் மூவரும் கோச்சில் ஏறி உட்கார்ந்தார்கள். அவர்களைக்கண்ட ஜனங்கள் கூச்சலிடாமலும் பரிகாசம் செய்யாமலும் அக்குற்றவாளிகளிடம் அனுதாபம் காட்டினார்கள்.

மறுபடியும் சிறைக்கதவு திறக்கப்பட்டது. அப்போது வெளிவந்த உருவத்தைத்தான் அனைவரும் உற்று நோக்கினர். அவள் யாரென்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். மகா கொடிய இராஜம்மாள்தான். அவளை முன் நாள் இரவு ஜகதீசன் சிறையில் பார்த்தபோதே அவள் எவ்வளவோ இறங்கிப் போயிருந்தாள். இந்த சொற்பமணி நேரத்துக்குள் அவள் முகம் இன்னும் அதிகம் வெளுத்திருந்ததுடன் தேகமே அச்சத்தால் நடு நடுங்கிக் கொண்டிருந்தது. அவள் சிறையிலிருந்து வெளியே வந்ததும் ஜனங்கள் தன்னைக் கண்டு என்ன பரிகாசம்செய்யப் போகிறார்களோ என்னும் அச்சத்துடன் ஒருமுறை அனைவரையும் சுற்றிப் பார்த்தாள். ஆனால் ஜனங்களனைவரும் அமைதியாய் இருந்ததைக்கண்டு சிறிது ஆறுதல் அடைந்தாள். பிறகு அவள் சிறைக்காவல்காரர்களின் துணையால் மெதுவாக அவ்வண்டியில் ஏறிக் கொண்டாள். அதிலிருந்த மூவரைக்கண்டதும் அவளுக்கு ஆச்சர்யமாய்விட்டது. தனக்கும் தெரியாமல் அவள் வாயி

னின்றும் ஒரு உளறல் வெளிவரும்போலிருந்தது. ஆயினும் அதைச் சமாளித்துக்கொண்டு அடக்கி விட்டாள்.

அவர்கள் ஏறிய வண்டியும் செல்லத் தொடங்கியது. அவர்களுடன் மதபோதகர்களும் இருவர் அவர்களுக்கு உபதேசம் செய்துகொண்டே சென்றூர்கள். இரங்கம்மாள் மதபோதகர் கூறியதை கவனமாகக்கேட்டாள். மற்ற முரடர்கள் மூவரும் கவனமாகத்தான் கேட்டு வந்தார்கள். அவள் பணம் கொடுத்து தூண்டிய ஒரு காரியத்துக்காகத் தானும் மூன்று முரடர்களும் இப்போது தூக்கு மேடையில் ஏறவேண்டி யிருப்பதால் அவள் அவர்களை வேண்டுமென்றே பார்க்காமல் இருந்தாள். ஆயினும் அம்முரடர்கள் மட்டும் அம்மாது இராஜம்மாள் என்று தெரிந்து கொண்டதும் அவள் சில வாரங்களுக்குள் இவ்வாறு ஆச்சர்யமான மாறுதல் அடைந்ததைக்கண்டு ஆச்சர்யமடைந்தனர். வண்டி தூக்குமேடையின் பக்கம் ஓடிக்கொண்டிருக்கிறது. ஜனங்கள் பெருங்கூட்டமாக அதைச் சூழ்ந்துகொண்டு சென்றூர்கள். ஆகவே ஜனங்கள் கோஷமிடாவிட்டாலும் சந்தடி அதிகமாகவே இருந்தது. தூக்குமேடையில் ஏறவேண்டிய அவர்களை ஏற்றிச்சென்ற அந்த வண்டி ராயல் ஓட்டல் இருந்த தெருவின் வழியேதான் செல்ல நேரிட்டது. இராஜம்மாள் வண்டியில் ஏறியதுமுதல் தலையைக் குனிந்து கொண்டே இருந்தாள் என்றூலும் வண்டி ஓட்டலின் முன் சென்றபோது அவளுக்கு உள்ளத்திலிருந்து ஏதோ உணர்ச்சி தோன்றியதைப்போல் தலையை நிமிர்ந்து பார்த்து அந்த ஓட்டல் மாளிகையின் ஜன்னல்களி னின்றும் வேடிக்கை பார்க்கும் ஜனங்களில் ஜகதீசனும் இருக்கிருனே என்று கவனித்துப் பார்த்தாள். ஆனுல் அவன் அக்கூட்டத்தில் இருக்கவில்லை. இத்தகைய பரிதாபமான காட்சியை

ஒரு வேடிக்கையாகப் பார்க்கும் சுபாவம் அவனிடத்தில் இல்லை.

அவர்கள் ஏறிவந்த வண்டி தூக்குமேடை அமைக்கப் பட்டிருக்கும் மைதானத்தினருகில் வந்துவிட்டது. அவள் அதை ஒருவாறு உணர்ந்து கொண்டாள். உடனே அவள் மூளையும் மனமும் குழம்பிவிட்டது. அதனால் மதபோதகர் என்ன சொல்கிறார் என்பதில் அவள் கவலை செல்லவில்லை. மைதானத்தின் அருகில் வண்டி வந்ததும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் மாபெருங்கூட்டமாகக் கூடியிருப்பதைக்கண்டாள். அவ்வளவு ஜனக்கூட்டத்துக்கும் மேல் உயரமாகத் தூக்கு மேடை அமைந்திருப்பதைக் கண்டாள். அதைக்கண்டதும் அச்சத்தின் மிகுதியால் "ஐயோ கடவுளே" என்று அலறினாள். தொப்பனும் தொம்மனும் அச்சத்தால் இன்னசெய்வதென்று தோன்றாமல் எதிரில் இருந்த மதபோதகரின் காலில் விழுந்தார்கள். வெறியன்மட்டும் அவ்வளவு அச்சமடையவில்லையென்றாலும் தனக்கு மரணம் வந்துவிட்டதையறிந்து மிக்க துக்கத்துடன் உட்கார்ந்த இடத்தைவிட்டு அசையாமல் இருந்தான்.

ஆனால் அப்போது இராஜம்மாள் பற்பல யோசனைகளையெல்லாம் செய்துகொண்டிருந்தாள். அப்போது அவள் மனதில் தோன்றாத எண்ணங்களே இல்லையெனலாம். அதற்கு முன்னாள் இரவு சிறையில் ஜகதீசனிடம் கூறியதே போல் தன் சிறு பிராயம்முதல் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களையெல்லாம் வண்டியில் சென்றுகொண்டே சிந்தித்தாள். தான் யௌவனப்பிராய முடையவளா யிருந்தபோது எத்தனையோ ஆடவர்களின் காத்தில் அனுபவித்த இன்பங்களெல்லாம் அப்போது அவள் நினைவுக்கு வந்தன.

அப்போதும் அக்கூட்டத்தினிடையே வண்டி வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. அந்தவேளையிலும் அவள்

தான் எப்படியாவது தப்பித்துச்செல்ல முடியுமா? என்று யோசித்தாள். அந்த இறுதிக்காலத்தில் யாரேனும் எதிர்பாராமல் வந்து தன்னை மீட்பார்களோ என்றும், சட்டத்தின் உதவியேனும் தனக்கு அச்சமயத்தில் கிடைக்கக்கூடாதா என்றும், தன்னுடன் இருக்கும் மதபோதகரேனும் தனக்காகப் பரிந்து பேசலாகாதாவென்றும் நினைத்துத் தன் எண்ணத்தை அம்மதபோதகரிடம் சொல்ல வாயெடுக்க முயன்றபோது தன் உள்ளத்துள்ள ஆத்மா அவளிடம், அவ்வாறு தெரிவிப்பதில் பயன்படாதென்றும், இதற்குமுன் எத்தனையோமுறை அவரிடம் சொல்லவில்லையா என்றும் சொன்னதுபோல் தெரிந்தது.

ஆகவே அவள் தூக்குமேடையில் இறக்கவேண்டியது தவிர வேறு வழியில்லை. என்னசெய்வாள் பாவம்? சூரியன் மிகப் பிரகாசமாகப் பொலிந்து கொண்டிருக்கிறான். ஆகாயத்தில் மேகமென்பது சிறிதும் கிடையாது. அப்படிப்பட்ட ரம்யமானவேளையில் உயிரைத்துறக்க யாருக்குத்தான் மனம் வரும்? அப்படிப்பட்டநாளில் ஒரு உயிரை மாய்ப்பது தெய்விகத்தன்மைக்கு விரோதமல்லவா? ஆகவே சிறை அதிகாரிகள் அவளை மீண்டும் சிறைக்கு அழைத்துச்சென்று வைத்திருந்து இருட்டான வேளையில் தூக்கிலிடுவதுதான் நியாயம் என்று இவ்வாறெல்லாம் இராஜம்மாள் நினைத்தாள். அவள் அவ்வாறு நினைத்தாளேயொழிய அவள் ஏறிவந்த வண்டி சிறைப்பக்கம் திரும்பாமல் தூக்குமரம் நாட்டப்பட்டிருந்த மைதானத்தை நோக்கித் தான் அதிவிரைவாகச் சென்றது. தான் அப்போது அனுபவிப்பதெல்லாம் வாஸ்தவமாகவே இருந்தும் அவ்வளவு துயரமான தூக்குமேடையிலேறுவதை விரும்பாததால் தான் பார்ப்பதெல்லாம் கனவோ நனவோ என்றும் சந்தேகித்தாள்.

இவ்வாறு இராஜம்மாள் நினைத்துக்கொண்டிருக்கையில் அவ்வண்டியானது தூக்குமேடையின் பின்புறத்தில் போய் நின்றது. அம்மேடை சுமார் பத்தடி உயரமிருக்கிறது. ஆகவே அம்மேடைமீது நடப்பதெல்லாவற்றையும் தெருவில் கூடியிருந்த ஜனங்கள் பார்க்கமுடியவில்லை. அம்மேடைமீது தூக்குமரம் முறைப்படி ஜோடிக்கப்பட்டிருந்தது. இதையெல்லாம் இராஜம்மாளும், வெறியன், தொம்மன், தொப்பன் எனப்படும் அம்மூன்று முரடர்களும் கண்டதும் பயத்தாலும் துயரத்தாலும் கண்களை மூடிக்கொண்டார்கள். ஆனால் அவ்வாறு அதிகநேரம் கண்களை மூடிக்கொண்டிருக்க முடியவில்லை. அவற்றைப் பார்க்கவேண்டுமென்னும் ஆவல் அவர்களுக்கு அதிகரிக்கவே அவர்கள் தங்கள் கண்களைத் திறந்து ஜோடிக்கப்பட்ட தூக்குமரத்தை நன்கு கவனித்துப் பார்த்தார்கள்.

அவ்வேளையில் தூக்கிலிடுவோனும் அவனுடைய துணைவனுமாக இருவர் அம்மேடைமீது ஏறினர். வேறு இரு ஆட்கள் ஒவ்வொரு குற்றவாளியையாக மரத்துக்கு அழைத்து வரவேண்டும். அந்த இரு ஆட்களும் வந்துவிட்டார்கள். முதலில் தூக்கிலிடப்படவேண்டியது இராஜம்மாளே. ஏனெனின் அதிகாரிகள் அவள்மீது அனுதாபங்கொண்டு, அவள் முதலில் சாகாமல் மற்ற மூன்று ஆட்களும் சாவதைப் பார்த்துக்கொண்டிருந்தால் அவள் மனம் நொந்து அவதிப்படுவாளே என்னும் எண்ணத்துடன் அவளை முதலில் தூக்கிலிட உத்தரவிட்டிருந்தனர். ஆகவே ஆட்களிருவரும் அவளைப் பிடித்துத் தூக்குமரத்தினருகில் கொண்டுவர முயன்றபோது, அந்த முரடர்கள் மூவரும் அவள் கையைப்பிடித்துக் குலுக்கி அவளைச் சமாதானப்படுத்தி அனுப்பினார்கள்.

இராஜம்மாளுடன் மதபோதகரும் மேடைமீது ஏறினார். அப்போது அவளுக்கு ஏற்பட்ட துயரத்தை அளவிட்

டுரைக்க முடியாது. அவள் மற்றொரு உலகத்தின் வாயிற்படியில் நிற்பதால் அந்த அனுபவமில்லாத நாம் அவளுக்கு அப்போது ஏற்பட்ட மனோபாவம் எவ்வாறிருந்திருக்கு மென்று விளக்குவது அசாத்தியமல்லவா? அவள் ஏதோ கனவில் நடந்துசெல்வதுபோல் போனாள். தூக்கிலிடுவோனும் அவனது துணைவனுமாகச் சேர்ந்து இராஜம்மாளை இழுத்து தூக்குமரத்தினடியில் இணைக்கப்படும் பலகைமீது நிறுத்தி மேலே அவளது கழுத்தில் வளையத்தை மாட்டினர். உடனே அங்கிருந்த மதபோதகர் அவள் காதில் சில பிரார்த்தனைகளைக் கூறினர். ஆனால் அது பயன்படவில்லை. சமுத்திரத்தில் கரைத்த புளியாகவே போயிற்று. ஏனெனின் அப்போது அவள் மனம் சோகத்தில் மூழ்கியிருக்கையில் மதபோதகர் செய்த உபதேசம் அவள் செவியில் ஏறுவதெப்படி? அவள் அந்நிலையிலும் கண்ணைத் திறந்துபார்த்தாள். எதிரில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதையும், தான் எந்த நிலைமையில் இருக்கிறாள் என்பதையும் தெரிந்துகொண்டாள்.

அப்போது அவள் தான் காண்பதெல்லாம் கனவு அல்லவென்றும், உண்மையிலேயே நடந்துகொண் டிருக்கிறதென்றும் தெரிந்துகொண்டாள். ஆகவே அவள் தனக்கும் தெரியாமல் தனக்கு ஏற்பட்ட அச்சத்தின் மிகுதியால் ஓவென்று பேரிரைச்சல் இரைந்தாள். இதைக்கண்டு எல்லா ஜனங்களும் திடுக்கிட்டார்கள். ஆயினும் அவள் என்செய்வாள்! துக்கத்தின் மிகுதியானது அடக்கமுடியாமல் அப்படிப்பட்ட இரைச்சலாக வெளிவந்துவிட்டது. அப்போது அவள் போட்ட சத்தத்தை அந்நகரவாசிகள் நீண்டகாலம் வரை மறக்காமல் இருந்தார்கள். அப்படிப்பட்ட காட்சியைக் காண்பதும் கேட்பதும் மிக்க பரிதாபமானதாயும், அச்சமானதாயு

மிருந்தது. ஆனால் அவள் அவ்வாறு கத்தியதால் ஏற்பட்ட பலன் என்ன? அதனாலேயே தூக்கிலிடுவது நின்றுவிடுமா? இல்லை. இல்லை. உடனே தூக்கிலிடுவோன் ஏதோ இயந்திரத்தைத் திருப்பியதும் ஏதோ கத்திபோல் ஒன்று அவள் கழுத்தில்வந்து பாயவும் இரத்தம் பீறிட்டுக்கொண்டே அவள் தலை வேறாகவும் முண்டம் வேறாகவும் வந்துவிழுந்தன. உடனே அங்கிருந்த ஆட்கள் அதை எடுத்துப் பத்திரப்படுத்தினார்கள். கூடியிருந்த ஜனங்களனைவரும் பரிதாபத்துடன் கண்ணீர்விட்டனர். ஐயோ பாவம் என்றனர். இவ்வாறாக இராஜம்மாள் கதி முடிந்துவிட்டது. பிறகு மூடர்கள் மூவரும் இவ்வாறே ஒவ்வொருவராகத் தூக்குமேடையில் மடிந்தனர். பிறகு கூட்டமும் கலைந்துவிட்டது. அந்த இடம் சுத்தப்படுத்தப்பட்டது. கொலை, களவு, விபசாரம் முதலிய பாதகச் செயல்களில் ஈடுபட்ட அவர்கள் அதற்கேற்ற தண்டனையை அடைந்துவிட்டார்கள். 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பதுபோல் நமது நடத்தைகளுக் கேற்ப சன்மானங்களோ தண்டனையோ அப்போதைக் கப்போது கிடைக்காமற் போவதில்லை. ஆதலின் ஆறறிவுபடைத்த மக்களாகிய நாம் சிறிதும் தீயசெயல்களில் ஈடுபடாமல் நற்குண நற்செய்கைக ளுடையவர்களாயிருந்து இறைவனுடைய கிருபாகடாக்ஷத்திற்குப் பாத்திரர்களாகிய இம்மையிலும் மறுமையிலும் நற்பேறு எய்துவதே நமது கடமையாகும்.

158 - வது அத்தியாயம்

இப்போது நாம் இரத்தினபுரியில் மதனவல்லி தனது மாளிகையில் எந்த நிலைமையில் இருக்கிறாள் என்பதையும், அவளைப்பற்றித் தெரியப்போகும் ஆச்சர்ய மர்மங்களையும் கவனிப்போம். அன்று பகல் பன்னிரண்டு மணி இருக்கும். அவள் தன்னை அலங்கரித்துக்கொள்ளும் அறையில் இருக்கிறாள். அச்சமயத்தில் ஒரு வேலைக்காரன் அவளிடம் வந்து அருமைநாதம் பிரபுவின் குமாரன் மதுரைநாயகம் பிரபு வெளியில் வந்திருப்பதாயும், அவன் மதனவல்லியைக் காண விரும்புவதாகவும் தெரிவித்தான். உடனே அவனை உள்ளே அழைத்து வரும்படி மதனவல்லியும் சொல்லி யனுப்பினாள். சில நிமிஷங்களுக்குள் மதுரைநாயகம் பிரபுவும் அவ்வறையில் வந்து சேர்ந்தான்.

அவனைக்கண்டதும் மதனவல்லி மிகச் சந்தோஷத்துடனும் ஆர்வமாக வரவேற்கும் நோக்கத்துடனும் தன் கையை நீட்டி, "ஐயா! உனக்கு நான் பிரத்யேகமாக எப்போதும் வரலாமென்று அழைப்பு அளித்திருக்கிறேனல்லவா? அப்படியிருக்க நீ இன்று என்னை நேராக வந்து பாராமல் ஆள் மூலம் சொல்லி யனுப்பவேண்டிய அவசியமென்ன" என்றாள்.

மதுரை:—இப்போது நடுப்பகலாய் இருக்கிறதே. பகல் இரண்டுமணிக்கு மேலல்லவா வெளியார் வந்து உன்னைப் பார்க்க முடியும்? ஆயினும் என்னைப்போல் அவசரவேலையைக் கவனிப்பதற்கு வர இதுதான் தக்க சமயமென்று நினைத்தேன்.

மதன:—அவசரவேலையா? அதென்ன அப்படிப்பட்டவேலை? நமக்குள் என்னவேலை இருக்கப்போகிறதென்று எனக்குத் தெரியவில்லை. எப்படியாயினும் சரி. நான் உன்னை வரவேற்கிறேன். ஆனால் இப்போது நீ வந்ததுதான் நல்லவேளை. இப்போதுதான் என்னவேலை செய்வதென்று தோன்றாமல் நாங்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே எதுவும் பேசச் சாவகாசமுண்டு.

மதுரை:—என்? ஏதேனும் சித்திரம் அல்லது தையல் முதலிய வேலைகளைக் கவனிக்கக்கூடாதா?

மதன:—நான் சதாகாலமும் இன்பத்திலேயே காலங்கழிக்க ஆரம்பித்து விட்டேன். அப்படிப்பட்ட நல்ல வேலைகளைச் செய்வதே இல்லை. முதலில் சொற்பகாலம் நாவல்களைப் படித்துக்கொண்டிருந்தேன். ஆனால் நாளடைவில் அதையும் விட்டுவிட்டேன். ஏனெனின் பெரும்பான்மையான நாவல்கள் உண்மைச்சரித்திரங்களாக இருப்பதில்லை.

மதுரை:—நீ நாவல்கள் தவிர வேறு நல்ல நூல்களைப் படித்ததில்லையா?

மதன:—நிச்சயமாகவே படித்திருக்கிறேன். நான் பெருமை சொல்லிக் கொள்ளவில்லை. என்னைச் சாதாரணமாக எல்லாம் அறிந்தவள் என்றே கூறவேண்டும். நான் நம் நாட்டுக் கவிவாணர்களின் கவிகளையெல்லாம் படித்திருக்கிறேன். இதோபார். இந்த சித்திரங்களெல்லாம் எல்லாம் வரையப்பட்டவை. ஆனால் இம்மாளிகைக்கு வந்த பின்னர் சோம்பேறித்தனம் அதிகரித்து விட்டதுடன் என் புத்தியானது இப்படிப்பட்ட நல்ல விஷயங்களில் செல்வதே இல்லை.

மதுரை:—ஓ! அந்த சித்திரங்கள் மிக அழகாக இருக்கின்றன. நான் உன் எதிரில் முகஸ்துதியாகப்பேசுகிறேன் என்று கருதவேண்டாம். எனக்கும் சித்திரத்தில் அதிக பிரியம் உண்டு. இவை அதிக சாமர்த்தியத்தையும் காண்பிக்கக் கூடியவையாய் இருக்கின்றன. மேலும் நிதானமாக முறைப்படி கற்றுக்கொள்ளப்படாமல் இயற்கையாகவே விரைவில் வந்துவிட்ட சாமர்த்தியமென்றும் தோன்றுகிறது.

மதன:—மதுரைநாயகம் பிரபு! நீ கூறுவது சரியே! இதனால் நீ முகஸ்துதியாகப் பேசவில்லையென்பதும், அதிக அனுபவம் வாய்ந்த ஜட்ஜ் அல்லது நீதி கூறுவோன் என்றும் தெரிகிறது. இன்னும் நான் சங்கீதத்திலும் தக்க பயிற்சி பெற்றுள்ளேன். பியானோ என்னும் வாத்தியக்கருவியில் எந்த மாதினுடனும் போட்டி போடத் தயாராக இருக்கிறேன். சம்பாஷணையிலும் நான் இளைத்தவளல்ல. இன்னும் போகப்போக அது உனக்கே தெரிந்துவிடும்.

மதுரை:—அப்படியானால் நாம் இன்னமும் அதிகம் நெருங்கிப் பேசக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்குமென்று நீ நினைக்கிறாயா? அவ்வாறு நெருங்கிய பந்துத்வம் ஏற்படுவதை நீ விரும்புகிறாயா?

மதன:—நானாக உனக்குப் பிரத்யேக அமைப்பு அளிக்கவில்லையா? தயவுசெய்து ஏதோ வேலையாக வந்திருப்பதாகச் சொன்னாயே அது என்னவேலையென்று தெரிவிக்க முடியுமா? நீ மிக்க ஜாக்கிரதையாகப் பேசுவதற்கேற்ப உன்வேலையும் இருக்குமென நான் நினைக்கிறேன்.

மதுரை:—அப்படியா? நான் நேசமற்ற முறையில் பேசுவ தாக நீ நினைக்கிறாயா?

மதன:—இல்லை, இல்லை. நான் அப்படி நினைக்க வில்லை. நீ வந்ததுமுதல் அன்புடனேயே பேசுகிறாய். மேலும் நாம் இருவரும் பேசுவதானது சகோதரனும் சகோதரி யும் பரஸ்பரம் அன்புடன் பேசுவதுபோலவே இருக் கிறது.

மதுரை:—ஆ, அப்படியா?

மதன:—ஆம். நீ இருக்கும் நிலைமையைப்பார்த்தால் நாம் இருவரும் முதல் முதலில் சந்தித்த விவரத்தைப்பற்றி இப்போது ஏதோ பேச விரும்புகிறாய்போலத் தெரி கிறது.

மதுரை:—அம்மா! நான் ஏதோ விஷமத்தனமாக இங்கு வந்ததாக நீ நினைக்கவேண்டாம். முதன் முதலில் நான் உன்னை, நீ அந்தக் கோயிலில் செல்லப்பப் பிர புவை விவாகம் செய்து கொண்டபோது கண்டேன். அதில் என்ன விசேஷ மிருக்கிறது.

மதன:—என்ன? நீ அந்தக் கோயிலில் அப்போது இருந் தாயா.

மதுரை:—நான் அந்த விவாகத்துக்காக அங்கு வரவில்லை. வேறு சொந்தவேலையாக அங்கு வந்திருந்தபோது உன் விவாகமும் நடைபெற்றது. நான் உன்னை அங்கு பார்த்தபோது மிக ஆச்சர்யமடைந்தேன். ஏனெனில் நான் அதற்குச் சில வாரங்களுக்குமுன் மதனவல்லி யைப்பற்றி நகரெங்கும் பேசிக்கொண்டதைக் கேள் விப்பட்டிருந்தேன். ஆனால் நீதான் அந்த மதன வல்லி என்று அப்போது எனக்குத் தெரியவில்லை.

ஆகவே அவ்வளவு அழகுவாய்ந்த நீ அம்மணமேடை மீது ஏறியதைக்கண்டு ஆச்சர்யமடைந்தேன்.

மதன:—சரி. நீ அதைப்பற்றி ஒன்றும் பிறகு விசாரணை செய்யவில்லையா?

மதுரை:—இல்லை. அவ்வாறு ஒன்றும் விசாரிக்கவில்லை. ஏனெனின் நான் முன்னமே உன்னிடம் தெரிவித்திருக்கிறபடி எனக்கு அப்படிப்பட்ட குணம் கிடையாது. அநாவசியமாகப் பிறரைப்பற்றி விசாரிக்கமாட்டேன். மேலும் என் தந்தை மறைந்துபோன விஷயமாக விசாரித்துக் கொண்டிருந்ததால் என் கவனத்தை வேறு விஷயத்தில் செலுத்த முடியவில்லை. ஆனால் அன்று இரவு நான் இளவரசரைச் சந்தித்துப் பேச வந்தபோது நீ காண்பித்த குறிப்பினால் மதனவல்லி என்னும் பெயரால் இரத்தினபுரியில் உள்ள மாது யார் என்பதையும், முதன் முதலாக நான் எங்கு சந்தித்தேன் என்பதையும் தெரிந்துகொண்டு விட்டேன்.

மதன:—அப்படியானால் இப்போது நீ என் முழுவிவரத்தையும் அறிய விரும்புகிறாய்போலும்!

மதுரை:—இல்லை. அப்படிப்பட்ட ஆவல் ஒன்றும் எனக்குக்கிடையாது. சாதாரண சந்தர்ப்பங்களில் உன்னைப் போன்ற மாதர்களின் இரகசியத்தை அறிய முயல்வது கண்யமுள்ள ஆடவர்களுக்கு அழகாகாது.

மதன:—நீ சாதாரண சந்தர்ப்பங்கள் என்று கூறுவதைப் பார்த்தால் நம்மிருவருக்கு மிடையில் அசாதாரணமான விஷயங்களும் இருப்பதாகத் தோன்றுகிறதே.

மதுரை:—நான் உன்னுடன் தாராளமாக ஏதோ பந்துத்வ முறையில் பேசிக்கொண் டிருக்கிறேனல்லவா? நாம் பரஸ்பரம் பல வருஷங்களாகவே அறிந்தவர்களல்லவா?

இப்போது மூன்றும் முறையாக நான் உன்னைச் சந்திக்கிறேன். நான் ஜெகதீஸ்வரியை மணந்துகொள்ள ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறேன் என்பது உனக்குத் தெரியுமா?

மதன:—ஆம்; நான் அவ்வாறுதான் கேள்விப்பட்டேன். ஆயினும் நீ ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது திடீரென்று வேறு விஷயத்தைப்பற்றிப் பேசுவதேன்?

மதுரை:—அவசரப்படாதே. நான் சொல்வதை நிதானமாகவும் கவனமாகவும் கேள். நான் ஜெகதீஸ்வரியை மணந்துகொள்ளப்போவது நிச்சயம். நான் அவளை அவ்வளவு அதிகமாக நேசிக்கின்றேன். மனத்தாலும் காயத்தாலும் அவளுக்குத் துரோகம் செய்யமாட்டேன்.

மதன:—நீ இவ்வாறு உறுதி கூறுவதற்காக நான் உன்னைப் பாராட்டுகிறேன். ஜெகதீஸ்வரியும் மிக அழகானவளென்றும் நற்குண நல்லொழுக்கங்கள் அமைந்தவளென்றும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆதலின் உங்களுடைய விவாகம் திருப்திகரமானதாகவே இருக்குமென்பதில் ஆட்சேபமில்லை. ஆனால் நீ திடீரென்று வேறு விஷயத்தைப்பற்றிப் பேசுவதன் காரணமென்ன?

மதுரை:—நான் ஜெகதீஸ்வரியை எவ்வளவுதூரம் நேசிக்கிறேனென்றால் மனத்தாலுங் காயத்தாலுங்கூட நான் அவளுக்குத் துரோகம் செய்யக்கூடாத நிலைமையில் இருக்கிறேன். அப்படியிருந்தும் உன்னுடன் நெருங்கித் தாராளமாகப் பேசிக்கொண்டிருக்கிறேன்.

மதன்:—ஆயினும் உன் நடவடிக்கையால் நீ ஏதோ விசாரத்துடன் இருப்பதாகவே தெரிகிறது. நீ பேசுவதிலிருந்து இன்னும் ஏதோ ஒரு பெரிய விஷயத்தைச் சொல்வதற்காகவே இவ்வளவுதூரம் முகவுரை கூறிக்கொண்டிருக்கிறாய் என்பது எனக்குத் தெரிகிறது. நீ எவ்வளவு தாராளமாகவும், நெருங்கியும் பேசினாலும் அதை வரவேற்க நான் தயாராக இருக்கிறேன். நாம் இருவரும் பழைய சினேகிதர்களைப் போலத்தான் நானும் நினைக்கிறேன். எனக்குள்ளும் ஏதோ பந்துத்வ உணர்ச்சி தோன்றுகிறது. அதனால்தான் நீ உன் காதலியையே விவாகம் செய்துகொண்டு சந்தோஷமாக வாழவேண்டுமென்று கூறினேன்.

மதுரை:—ஆம்; சகோதரனும் சகோதரியும் பேசுவதுபோல இருப்பதாகக் கூறினாய். நான் நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகம். நெருங்கிப் பேசுகிறேன் என்பதைக் கதனிக்கிறாயா? நான் இந்தஅறையில் நுழைந்தபோது மாதே! என்று கூப்பிட்டேன் இப்போதோ நீ என்றுபேச ஆரம்பித்தேன். இன்னும் சொற்பநேரத்துக்குள் உனக்குப் பாலியத்தில் வைத்த பெயரையே எடுத்துக் கூப்பிடுவேன்.

மதன்:—நீ இவ்வாறு பேசுவதில் ஏதோ மர்மம் இருக்கிறது. அதை அறிந்துகொள்ள என்னால் முடியவில்லை. உன் தந்தையின் பிரேதத்தைப் புதைத்து விட்டதுமுதல் உன்னிடம் ஏதோ வருத்தக்குறி காணப்படுகிறது.

மதுரை:—ஓ! அப்படியானால் என் தந்தையின் பிரேதம் அகப்பட்டதும், முந்தாநாள்தான் அது முறைப்படி புதைக்கப்பட்டதும் உனக்குத் தெரியும்போலும்?

மதன:—ஆம்; அதைப் பத்திரிகைகளில் படித்தேன். இதனால் நீ அதிக வருத்தமடைந்திருப்பாய் என்று நான் நம்புகிறேன். நீ இப்போது சந்தோஷமாகப் பேச முடியாமல் ஏதோ கவலையுடன் இருக்கிறாய் என்பதும் தெரிகிறது. ஏதோ ஒரு பெரிய விஷயத்தை என்னிடம் தெரிவிக்கவே நீ இப்போது என்னை எங்கேயோ பேச்சில் இழுத்துச் செல்கிறாய் என்பதை நான் அறிகிறேன்.

மதுரை:—ஆம்; அப்படித்தான் நினைத்துக்கொள். நீ அந்த விஷயத்தைத் தெரிந்துகொள்ளத் தயாராய்விட்டாயா?

மதன:—எந்த விஷயம் தெரிந்துகொள்ளத் தயாராகவேண்டும்? நீ என்ன; என்னைப் பயமுறுத்துகிறாய்போலிருக்கிறதே!

மதுரை:—இப்போது ஒரு சகோதரன் ஒரு சகோதரியிடம் பேசுவதேபோல் நான் பேசுகிறேன். நாம் இருவரும் பந்துக்கள் என்று வைத்துக்கொள். அதைப்பற்றி மெதுவாகத்தானே நான் உனக்குத் தெரிவிக்கவேண்டும்.

மதன:—இதை எவ்வாறு நம்பமுடியும்? ஆனால் நீ வேடிக்கையாகப் பேசுகிற நிலைமையில் இல்லாததால் நீ சொல்வது உண்மையாகவே இருக்குமென நம்பவேண்டியதாகவும் இருக்கிறது. ஆயினும் எப்படி நமக்குள் உறவு ஏற்படுகிறதென்று தெரியவில்லை.

மதுரை:—நான் சத்தியமாகவே உண்மையையே கூறுகிறேன். நாம் இருவரும் உறவினர்களே. இன்னும் உண்மையைக் கூறவேண்டுமானால் நம்மிருவருக்கும் தந்தை ஒருவரே. நீ எனது ஒன்றுவிட்ட சகோதரி.

இதைக்கேட்டதும் மதனவல்லி அதிக ஆச்சர்யமடைந்தாள். ஏனெனின் அவளுக்கு விஷயமொன்றும் தெரியாது. ஆனால் மதுரைநாயகம்பிரபு மற்றும் சில விவரங்களைக் கூறிய பின்னர் அவள் பல மர்மங்களை விளங்கிக்கொண்டாள். ஆயினும் அந்த விஷயங்களை நேயர்களுக்கு விளக்கிக்கூற இது சரியான சந்தர்ப்பமன்று. தக்க இடத்தில் அறிவிக்கப்படும். நேயர்கள் பொறுமையுடன் இன்னும் நடக்கப்போகும் விசித்திரங்களைப் படித்து வரவேண்டும்.

சற்றுநேரம் அவர்கள் பல விஷயங்களைப்பற்றிப் பேசிய பின்னர் மதனவல்லி மதுரைநாயகம் பிரபுவினிடம், "ஆ! அப்படியானால் என்னைச் சகோதரியாக அடைந்ததற்காக நீ வருத்தப்படமாட்டாய் என்று நினைக்கிறேன். ஆயினும் என் நடத்தைகளைப்பற்றி நானே வெட்கப்படுகிறேன். மேலும் நான் இளவரசர் கள்ளக்காதலி என்று பகிரங்கமாகத் தெரிந்திருக்கிறதல்லவா" என்றாள்.

மதுரை:—நான் உன் நடத்தையைப்பற்றித் திருப்பிக்கூற நான் இங்கே வரவில்லை. ஆனால் முக்கியமான இரகசியத்தை வெளியிடவே வந்தேன். அதைச் சொல்லியும் முடிந்து விட்டது. ஆகவே இப்போது என்னை நீ சகோதரனாக ஏற்றுக்கொள்கிறாயா இல்லையா? நான் உன்னைச் சகோதரியாகப் பாவிக்கலாமா என்பதை நீதான் சொல்லவேண்டும்.

மதன:—நான் உன்னைச் சகோதரனாக வரவேற்பதில் தாமதப்படுவேன் என்றும் நீ நினைக்கிறாயா? நானும் எனது சகோதரியும் சட்டமுறைப்படி உன் தந்தையின் குமாரிகளல்லவாகையால் நீதான் எங்களைச் சகோதரியாகப் பாவிக்கவேண்டும்.

186559
சென்னை-600 ...

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்தபோதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்குமுன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம், 4-ம் பாகம் நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரி ரகசியம் 5-ம்பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரி௴ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3	0	
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-8-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம் 4-பாகமும் ...	8	4	தினகரசுந்தரி	1	0
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
கற்கோட்டை ...	2	0	ரத்தினபாய் ...	1	12
மின்சார மாயவன் ...	1	8	வீரநாதன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	குணசுந்தரன் ...	0	12
கனகபூஷணம் 2பாகம் ...	3	8	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
இராஜாமணி ...	2	0	கமலசேகரன் ...	1	12
ஆனந்தஸிங் ...	2	0	பூங்கோதை ...	0	10
மதனபூஷணம் ...	1	0	இந்திராபாய் ...	2	8
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ...	9	10	அமராவதி 2 பாகமும்	4	0
			மதிணம்பாள் 2 பாகமும்	3	0
			லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
6. லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.